Regd. No. M. 4392

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.

முடிவு தேதி நெருங்குகிறது!

"கல்கி"

சிறு கதைப் போட்டி

பரிசு ரூ. 1000

முதல் பரிசு ரூ. 500

ஐந்து பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 100

•

கதைகள் எல்லாம் 1944-ம் வருஷம் ஏப்ரல்மீ 30உக்குள் "கல்கி" காரியாலயத்துக்கு வந்து சேர வேண்டும். கவரின் மேல் "சிறு கதைப் போட்டி" என்று குறிப்பிட வேண்டும்.

•

மற்ற விவரங்கள் ஏப்ரல்மீ 9உ "கல்கி" உள் பக்க அட்டையைப் பார்த்துத் தெரிந்து கொள்ளவும்.

•

மானேஜர், "கல்கி"

சந்தோஷச் செய்தி!

ஏப்ரல் 1உ முதல்

"கல்கி"

வாரப் பதிப்பாக வெளியாகி வருகிறது

•

பிரதி வாரமும் சனிக்கிழமை யன்று எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

•

சந்தா விவரம்:

வருஷ சந்தா	ரூ.	13—0—0
6 மாத சந்தா	ரூ.	6—8—0
தனிப் பிரதி	அணா	0—4—0

6 மாதத்திற்குக் குறைந்து சந்தா எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

•

மானேஜர்,

"கல்கி" சென்னை.

கல்கி



KALKI ஏப்ரல் 23, 1944 4 அண

அவன் எப்படி சுத்தமாகவும் சந்தோஷமாகவும் இருக்க முடியும்?





— அவன் 'அழுக்கு அபாய'த்திலிருந்து காப்பாற்றப் படுகிறான் என்பதை நிச்சயம் செய்துகொள்ளுங்கள்

அவனை சுத்தமாக இருக்கும்படி எதிர்பார்ப்பதில் பிரயோஜனம் இல்லை. அவனால் அது இயலாது. ஆரோக்கியத்துடன் இருக்கும் பையன் செய்யும் ஒவ்வொரு விளையாட்டிலும் அவன் அழுக்கடைந்து விடுகிறான். ஆரோக்கியமான லைப்பாய் பழக்கத்தை நீங்கள் அவனுக்கு கற்பித்திருந்தால் அழுக்கு அபாயகரமானலும் அது ஒன்றும் செய்யாது; நீங்கள் கற்பித்திருக்கிறீர்களா? கிருமி நாசக லைப்பாய் சோப்பினால் சுத்திசெய்துக் கொள்ளுவதற்கு எல்லா குழந்தைகளுக்கும் கற்பிக்கவேண்டும். அழுக்குகளில் உண்டாகும் எல்லாவித கிருமிகளின் அபாயத்திலிருந்தும் இந்த பழக்கம் காப்பாற்றும். லைப்பாயில் ஆரோக்கிய சாதனத்திற்கான ஒரு அபூர்வத் தன்மை இருக்கிறது. அதுதான் அதன் உலகப் பிரசித்திக்குக் காரணம். எங்கும் நிறைந்திருக்கும் அழுக்கு அபாயத்தினின்றும் உங்களுடைய குழந்தைகள் காப்பாற்றப்பட வேண்டியவர்கள்.

எல்லா குழந்தைகளும் லைப்பாய் சோப்பை விரும்புகிறார்கள்.

லைப்பாய் நல்ல ஸோப்பைக் காட்டிலும் சிறந்தது அதுஒருநல்லவழக்கம்

L. 51-50 TM LEVER BROTHERS (INDIA) LIMITED

"கலி நருலகு", அபேரியில் விளங்குகிற "நகுமுமோ", என்ற கீர்த்தனங்களையும் மற்றும் சில முக்கியமான கிருதிகளையும் ரொம்பவும் அமைப்பாகப் பாடுவதில் சிறந்தவர் என்ற புகழை இவர் அடைந்தார்.

இவருக்கு முன் சங்கீதச் சக்கரவர்த்தியான ஸ்ரீ வேணுகானம் சரப சாஸ்திரிகள் அபேரி ராகத்தில் இருக்கிற "நகமுமோ" என்ற கீர்த்தனத்தை வாத்தியத்தில் வாசித்து, இனி எப்பொழுதும் ஒருவராலும் இக் கீர்த்தனத்தை இப்படி வெளியிட முடியாது என்ற மகிமையை அடைந்ததுபோல், ஸ்ரீ புஷ்பவனமய்யரும் வாய்ப்பாட்டில், "நகமுமோ" "கலிநருலகு", "க்ஷீரஸாகர சயன" முதலிய கீர்த்தனங்களை அதே மாதிரி உயர்ந்த பாவ, பாணியுடன் பாடி, இனி இக் கீர்த்தனங்களை எந்த வித்துவான் பாடினாலும் இம்மாதிரி பாட முடியாது என்கிற கௌரவத்தைப் பெற்றார்.

இவர் தன்னுடைய யோக்கியதையை அனுசரித்து எவ்வளவு கௌரவம் வகிக்கலாமோ, அதற்குப் பதின் மடங்கு கூடவே வகித்துக் கொஞ்சம் மமதையுடனும் விளங்கி வந்தார். ஒரு சமயம் தஞ்சை ஜில்லாவில் ஒரு பெரிய மனிதர் வீட்டுக் கல்யாணத்தை ஒட்டி எல்லா வித்வான்களும் வரவழைக்கப்பட்டிருந்தார்கள். அதாவது சம்பாவனை எவ்வளவு என்பதைக் குறிப்பிடாமலே அவரவர்கள் கச்சேரி செய்ய வேண்டுமென்று மாத்திரம் குறிப்பிடப்பட்டு வரவழைக்கப்பட்டிருந்தார்கள். முக்கியமாய், கோனேரி ராஜபுரம் வைத்தியநாதய்யர், பூச்சி அய்யங்கார், பிடில் கோவிந்தசாமி பிள்ளை, தக்ஷிணாமூர்த்தி பிள்ளை, அழகநம்பியா பிள்ளை, கோட்வாத்தியம் ஸகாராம ராவ், நாதஸ்வர வித்வான் சிவக்கொழுந்து முதலான எல்லாப் பெரிய வித்வான்களும் வந்து கூடியிருந்தார்கள். நானும் கதைக்காகச் சென்றிருந்தேன். ரொம்பவும் செலவு செய்யப்பட்ட கல்யாணமாகையால் வித்வான்கள் எல்லோரும் நாலு நாளும் அவ்விடமிருந்து ஆனந்திக்கும்படியாயிருந்தது. ஜனங்கள் எல்லோரும் உயர்ந்த போஜனத்தையும், சங்கீத விருந்தையும் உண்டு களித்தார்கள்.

இந்தச்சமயத்தில் ஸ்ரீ புஷ்பவனமய்யர் ஏன் வரவில்லை என்று விசாரிக்க, தனக்கு இவ்வளவு 'ரேட்' கொடுத்தால்தான் வர முடியும் என்று எழுதியிருப்பதால் வரவழைக்கவில்லை என்பதை உணர்ந்தோம். "ஆஹா! இவ்வளவு வைபவத்துடன் நடக்கும் இக் கல்யாணத்தில் ஸ்ரீ புஷ்பவனமய்யர் பாட்டு இல்லாமலிருப்பது ஒரு பெரிய குறைதான்" என்று ஒரே வாக்காக எல்லோரும் பேசிக்கொள்வது எஜமான் காதில் விழுந்தது. அவர் அரை மனதுடன், ஸ்ரீ புஷ்பவனமய்யருக்கு அவர் கேட்ட 'ரேட்' கொடுப்பதாகத் தந்தி கொடுத்துக் கடைசி நாள் கச்சேரிக்குத் தருவித்தார்.

ஸ்ரீ புஷ்பவனமய்யரும் கடைசி நாள் வந்து, பிடில் கோவிந்தசாமி பிள்ளை, அழகநம்பியா பிள்ளை சகிதம் கச்சேரி செய்தார். ஆஹா! அவர் அன்று பாடிய காம்போஜி ராகமும், குந்தலவராளியும், காபியும் இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. கல்யாண வீட்டு எஜமான் ரொம்பவும் இவர் கானத்தில் ஈடுபட்டு, "இந்த கானத்திற்கு 'ரேட்'டே கிடையாது; எந்த ரேட்டிலும் கட்டுப்படாத கானம் இது" என்று சொல்லி, பேசின தொகையைப் போல் இரட்டிப்புச் சம்பாவனை தந்து இவரைப் பெருமைப் படுத்தினர்.

இதிலிருந்து ஸ்ரீ புஷ்பவனமய்யர் எப்பேர்ப்பட்ட கௌரவத்தையும் பெருமையையும் வகித்தார் என்பது நன்கு விளங்கும். இவ்வளவு புகழ் வாய்ந்த இவர் புகழுக்குத் தக்கவாறு அதிக காலம் ஜீவித்திருந்து இவருடைய மதுர கானத்தைக் கேட்கும்படியான பிராப்த காலம் ஜனங்களுக்கு இல்லாமல் போயிற்று.



குடும்ப விஷயம்

புருஷன் :—இன்னும் எத்தனை நாழி சமைப்பதற்கு? நான் போகிறேன் ஹோட்டலுக்கு.

மனைவி :—இல்லை, இன்னும் ஒரு நிமிஷம் பொறுங்கோ.

புருஷன் :—ஏன்? அதற்குள் சமைத்து முடித்து விடுவாயா?

மனைவி :—அதற்கில்லை; நானும் வருகிறேன் ஹோட்டலுக்கு.

புஷ்பவனம் ஐயர்

சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர்

பெரிய சங்கீத வித்வான்கள் கோஷ்டியில் இவர் ஒரு முக்கியஸ்தராக இருந்து வந்தார். சிறு வயதில் இயற்கையாகவே இவருக்கு ஜனங்கள் கேட்டு அதிக சந்தோஷத்தை அடையக் கூடிய சாரீரம் அமைந்து விட்டது. தக்கும் ஸ்தாயியும் இல்லாத சுருதியை வைத்துக்கொண்டு பாடிய இவருக்குச் சொற்ப காலத்திற் கெல்லாம் சாரீரத்திற்குத் தகுந்த ஸ்வர ஞானமும் ஏற்பட்டது.

இதற்கு முக்கிய காரணம் ஸ்வர சஞ்சாரத்தில் தேர்ச்சியுடையவரான எட்டியாபுரம் சமஸ்தானவித்வான் ஸ்ரீ ராமச்சந்திர அய்யர் அவர்களுடைய சேர்க்கைதான். ராமச்சந்திர அய்யர் அவர்களிடத்தில் மிக்க அன்புடனும் பக்தியுடனும் நடந்துகொண்டு, ஸ்வரசஞ்சார நுட்பங்களையும் சங்கீதசாஸ்திரத்தின் மர்மத்தையும் தெரிந்துகொண்டார். இவர் ஸ்ரீ தியாகப்ரும்மத்தின் கீர்த்தனங்களில் மிக்க பிரேமை கொண்டு அந்தக் கீர்த்தனங்களில் ஏற்பட்டிருக்கிற ராக பாணிகளை மனத்தில் வாங்கி அவைகளை அமைத்து ராகவிஸ்தாரம் செய்து பாடி வந்தார். அத்துடன்கூட உயர்ந்த பாணியுடன் விளங்குகிற இவருடைய ராகங்கள், பிரமிக்கக்கூடிய விவரமான பிருகாக்களுடனும் விளங்கினபடியால், ஜனங்களுக்கு எல்லையில்லா இன்பத்தைக் கொடுத்தது. இவர் தம்பூராவை சுருதி செய்து, ஷட்ஜமம் பஞ்சமம் சேர்த்து நின்றாலே ஜனங்களுக்கு நல்ல கோடையில் நடந்து வந்த மனிதனுக்கு 'ஜில்' லென்று பன்னீர் அடித்தால் எந்த ஆனந்தம் ஏற்படுமோ, அதற்கு நூறு மடங்கு செவி ஆனந்தம் ஏற்படும்.

புஷ்பவனம் ஐயருடைய கச்சேரிகளை நான் அடிக்கடி செட்டிநாடு, தஞ்சை, சென்னை முதலான இடங்களில் கேட்டிருக்கிறேன். அழகு அமைந்த சாரீரத்தை யுடைய இவர், மந்தஹாச முகத்துடன் பாடுங்கால் சர்வஜனங்களும் ஏகாக்ர சித்தர்களாயிருந்து கச்சேரியை அனுபவிப்பார்கள். ஸ்வரம் பாடுங் காலத்தில், கேவலம் வரட்டு ஸ்வரங்களாக யில்லாமல் ஒவ்வொரு ஸ்வரத்திலேயும் பூர்ண ராகக் களை தோன்றும். மிகவும் சொற்ப காலத்தில் அநேகம் பேர்களுடைய சங்கீதத்தைக் காட்டிலும் இவருடைய சங்கீதம் உயர்ந்த சங்கீதம் என்ற புகழை அடைந்தார்.

எப்பேர்ப்பட்ட பக்க வாத்தியக்காரர்கள் தனக்கு அமைர்தாலும் அவர்களைக் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் பாடி வந்தார். ஈச்வரனுடைய அனுக்கிரகத்தால் ஜிலுஜிலுப்பான சாரீரத்தைப் பெற்றவராகையால், பக்க வாத்தியமே இல்லாமல் வெறும் தம்பூராவை மாத்திரம் வைத்துக்கொண்டு பாடினாலே பதினாயிரக் கணக்கான ஜனங்கள் இவருடைய சங்கீதத்தை மெய் மறந்து கேட்பார்கள். தேகத்தைச் சரியாய்க் காப்பாற்றிக் கொள்ளாததால் சில சமயம் கச்சேரிகளைச் சிரமப்பட்டுச் செய்வார்.

கச்சேரிகள் செய்கிற வித்வான்களுடைய 'ரேட்' உயர்ந்ததற்குக்காரணம் இவரே. இவர் நாள்வரையில், சங்கீதத்திற்குக் குறைந்த சம்பாவனையே இருந்து வந்தது. தம் சங்கீதத்தில் ஜனங்களுக்கு விசேஷ மோகம் இருப்பதை நன்கு உணர்ந்த இவர் உயர்ந்த 'ரேட்'டைக் கேட்டு, பெற்றுப் பாடி வந்தார். எவ்வளவு ரூபாய் இவர் கேட்டாலும், பொது ஜனங்கள் அதைப் பொருட்படுத்தாமல், சந்தோஷத்துடன் கொடுத்துத் தருவித்தார்கள். இவரிடத்தில் விசேஷ மோகம் கொண்ட அநேக மைனர்களும், ஜமீன்தார்களும் இவருடன் கூடவே அடிக்கடி இருந்து பழகியதோடு, அநேக சன்மானங்களும் பரிசுகளும் வழங்கி இருக்கிறார்கள்.

இவர் லோப குணம் இல்லாமல், தாராள மனத்துடன், பணத்தைத் திரணமாய் நினைத்துச் செலவு செய்து, குஷியாய்க் காலத்தைக் கழித்தவர். அக்காலத்தில் மிருதங்கம், கஞ்சிரா, பிடில், பாட்டு முதலியவற்றில் கியாதி அடைந்த வித்வான்கள் எல்லோரும் இவரிடத்தில் மிக்க பிரியம் வகித்து, இவர் கச்சேரியை அருமை இல்லாமல் அடிக்கடி கேட்டுச் சந்தோஷிப்பார்கள். ஸ்ரீ தியாகப்ரும்மத்தின் தேவ காந்தார ராகத்திலுள்ள "க்ஷீரஸாகர சயன", குந்தலவராளியில்

பலசரக்கு

சட்ட சபைத் தேர்தலின் பொழுது ஸ்ரீ சத்தியமூர்த்தி வோட்டர்களைப் பார்ப்பதற்காகச் சென்னை மண்ணடியிலுள்ள நைனியப்பன் தெருவுக்குப் போயிருந்தார். அதே சமயத்தில் வோட்டர்களைப் பார்த்துக்கொண்டே போட்டி அபேட்சகர் ஸ்ரீ ஏ. ராமசாமி முதலியார் எதிரே வந்தார்.



அவரைப் பார்த்ததும் ஸ்ரீ சத்தியமூர்த்தி யோக க்ஷேமங்களை விசாரித்துக் கொண்டே கை குலுக்கினாராம். பக்கத்திலிருந்த ஸ்ரீ உபயதுல்லாவுக்கு இது பிடிக்கவில்லை. அவர் சத்தியமூர்த்தியை "என்னத்திற்காக அவருடன் கை குலுக்கினீர்கள்!" என்று கோபித்துக் கொண்டார். அதற்கு ஸ்ரீ சத்தியமூர்த்தி, "அழகுதான்! நான் அவருடைய கையையா குலுக்கினேன்? அவருடைய நாடி எப்படி அடித்துக்கொள்ளுகிறது என்றல்லவா பார்த்தேன்!" என்றாராம்.

★

"**நீ**ங்கள் திடமாயிருக்கிறீர்களல்லவா?" என்று ஒரு சமயம் சர்ச்சில் பிரிட்டிஷ் படைத் தலைவரான மாண்ட்கோமரியைக் கேட்டார். "நான் தினம் காலையில் ஐந்து மைல் ஓடுகிறேன். நான் சுருட்டுப் பிடிப்பது கிடையாது. குடிப்



பழக்கமும் இல்லை. ஆகவே நான் நூற்றுக்கு நூறு பங்கு திடமாயிருக்கிறேன்" என்று பதிலளித்தாராம் மாண்ட்கோமரி. சர்ச்சில் பளிச்சென்று, "எனக்கு தினம் ஐந்து மைல் ஓட அவகாசம் இல்லை. நான் நிறைய சுருட்டுப் பிடிக்கிறேன். சில சமயம் குடிப்பதும் உண்டு. ஆனால் நான் நூற்றுக்கு இருநூறு பங்கு திடமாயிருக்கிறேன்!" என்றாராம்.

★

குட்மேன் ஏஸ் என்னும் பிரபல அமெரிக்க ரேடியோ பாடகரை அவர் வழக்கமாக ஜவுளி வாங்கும் கடைக்காரன் பார்த்து, "தாங்கள் என்னிடம் 'சூட்'டுக்காக துணி வாங்கி வெகு நாட்கள் ஆகிவிட்டனவே" என்றான். அதற்கு அவர், "என்ன ஐயா பண்ணலாம்? ஒரு 'சூட்' தைக்க வேண்டும் என்றால் 750 டாலர் ஆகி விடுகிறதே" என்றார். "எப்படி 750 டாலர் ஆகும்? நான் வழக்கமாக 150 டாலர்தானே வாங்கிக் கொள்கிறேன்" என்றான். அதற்கு அவர், "நீ வாங்கிக்கொள்வது 750 டாலர்தான். ஆனால் நான் 750 டாலர் சம்பாதித்தால்தானே வரி போக 150 டாலர் மிஞ்சுகிறது" என்றார்.

★

ஒரு பெரிய நாஜி அதிகாரி ஸ்விட்ஜர்லாந்து தேசத்தைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்பொழுது யாரோ ஒரு அதிகாரியை "இவர் ஒரு கடற்படைத் தலைவர்" என்று



அறிமுகம் செய்து வைத்தார்கள். இதைக் கேட்டதும் அந்த நாஜி அதிகாரி, "கடலும், கடற்படையும் இல்லாத தேசத்துக்குக் கடற்படைத் தலைவர் எதற்கு?" என்று கேட்டார். அதற்கு அவர் "நியாயம் என்பதே இல்லாத தேசத்துக்கு நியாய சபை எதற்கு?" என்று கேட்டாராம்!

★

அமெரிக்காவின் பிரசித்தி பெற்ற பிரஸிடெண்டான ஏப்ரஹாம் லிங்கன் வீட்டில் பலத்த இரைச்சல் கேட்டது. பக்கத்து வீட்டுக்காரன் ஓடோடியும் வந்தான். வந்து பார்த்ததில் ஏப்ரஹாம் லிங்கனின் பிள்ளைகள் இருவரும் ஒருவரை யொருவர் சண்டை பிடித்துக் கொண்டிருந்தார்கள்.



"பையன்கள் இருவரும் எதற்காகச் சண்டை இடுகிறார்கள்?" என்று பக்கத்து வீட்டுக்காரன் ஏப்ரஹாம் லிங்கனைக் கேட்டான். அதற்கு அவர் "உலகம் முழுவதும் எதற்காகச் சண்டை போடுகிறதோ, அதே காரணத்துக்காகத்தான் அவர்களும் சண்டை போடுகிறார்கள். என்னிடம் மூன்று ஆப்பிள் பழங்கள் இருக்கின்றன. இருவரும் ஆளுக்கு இரண்டு வேண்டும் என்று கேட்கிறார்கள்" என்று பதில் அளித்தாராம்.

மளிகைக் கடை

ஸோமாஸ்

"என்ன மிஸ்டர் ஜகதீசன், ரொம்ப அவசரமோ? எவ்வளவு தூரம் போறாப் போலே?" என்று கேட்டுக் கொண்டே வந்தான் நடேசன்.

வேகமாகப் போய்க் கொண்டிருந்த ஜகதீசன் சட்டென்று நின்றான். "நம்ப மளிகைக் கடைச் செட்டியாரிடம் போகிறேன்! பழைய பாக்கிக்கு அவன் நோட்டீஸ் அனுப்பிவிட்டான். என்ன அயோக்கியத் தனம் பாருங்கள்! முப்பது ரூபாய்க்கு நோட்டீஸ் அனுப்பி யிருக்கிறான்; என் பாக்கி என்னவோ ஒன்பதேகால் ரூபாய்தான்!"

நடேசன், "இல்லை, ஸார்! உங்கள் கணக்கு தப்பா யிருக்கும்! செட்டியார் பரம யோக்கியர்! அப்படி யெல்லாம் செய்யமாட்டார்!" என்றான்.

"இல்லை, ஸார்! நான் அவ்வளவு முட்டாளா? முப்பது ரூபாய்க்கும் ஒன்பதேகால் ரூபாய்க்கும் வித்தியாசம் தெரியாமலா போய் விடும்? அவனைச் சும்மா விடுகிறேனா, பாருங்கள்!" என்று கூறிவிட்டு ஜகதீசன் மளிகைக் கடைக்குப் போனான்.

"என்ன செட்டியார், கணக்குக்கூடச் சரியாய்ப் பார்க்கிறதில்லையா? என் பாக்கி ஒன்பதேகால் ரூபாய்தானே? முப்பது ரூபாய்க்கு நோட்டீஸ் விட்டிருக்கிறீர்களே! ரொம்ப ஒழுங்கா யிருக்கிறதே! இது என்ன அநியாயம்?" என்று கோபத்துடன் இரைந்தான் ஜகதீசன்.

"சுவாமி, வாருங்கள்! வாருங்கள்! உள்ளே வாருங்கள்!" என்று சொல்லிக் கொண்டே செட்டியார் ஜகதீசனைக் கையைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றார்.

"ஸார், கோபிக்காதீர்கள்! இந்தாருங்கள் ரசீது! உங்கள் கணக்குப்படியே ஒப்புக் கொள்கிறேன்!" என்றார் செட்டியார்.

"அப்படியானால் பொய்க் கணக்குக் கொடுத்ததற்கு என்ன சொல்கிறீர்?"

"மன்னிக்க வேண்டும். உங்கள் பழைய பாக்கிக்காக நேரில் அநேகந் தடவை கேட்டேன். பையனை உங்கள் வீட்டுக்கு எத்தனையோ தடவை அனுப்பியாகிவிட்டது. பையன் கால் கடுக்க நடந்ததுதான் மிச்சம். என் கடைக் குமாஸ்தா பலதடவை உங்கள் வீட்டுக்கு வந்தார். ஒவ்வொரு தடவையும் நீங்கள் சால்ஜாப்புச் சொல்லிவிட்டீர்கள். இது மாதிரிதான் பல பேர் செய்தார்கள். எனக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. கடைசியில் எனக்கு ஒருவர் இந்த யோசனையைச் சொன்னார். இதே மாதிரி எல்லோருக்கும் நோட்டீஸ் போயிருக்கிறது. உங்கள் மாதிரியே எல்லோரும் கோபத்துடன் வந்து பணம் கட்டிவிட்டார்கள். உங்கள் நண்பர் நடேசய்யர்கூட இப்பத்தான் பணங் கட்டி விட்டுப் போனார். ஆனால் தயவு செய்து ஒருவரிடத்திலேயும் இந்த ரகசியத்தைச் சொல்லாதீர்கள்! செட்டியார் பரம யோக்கியர் என்று சொல்லுங்கள்! இல்லாவிட்டால் எனக்குச் சேரவேண்டிய பழைய பாக்கி ஒரு தம்பிடிகூட வசூலாகாது" என்று செட்டியார் ரொம்பக் கேட்டுக் கொண்டார்.

நடேசன், செட்டியாரை அவ்வளவு தூரம் புகழ்ந்து பேசியதன் காரணம் இப்போது தான் ஜகதீசனுக்குத் தெரிந்தது.

மறதி!



வீட்டு வாடகை

பகீரதன்

"பணம் பணத்தைத்தான் சேரும்" என்ற பழமொழியை நான் நம்பும்படி செய்தவர் திவான்பகதூர் தாமோதரம் பிள்ளை அவர்கள்தான்.

உள்ள சொத்துக்களையே என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்த ஆவுடையார் கோயிலுக்கு ஒரு லட்சம் ரூபாயும் பல பல்கலைக் கழகங்களுக்கு லட்சக் கணக்கிலும் பணத்தை வாரிக் கொடுத்தார்.

இப்படி லட்சம் லட்சமாக வாரி இறைப்பவர், நம்முடைய காரியத்தைக் கவனிக்க மாட்டாரா என்ற ஆவலுடன் தான் ஒரு நாள் அவர் வீட்டை நாடிச் சென்றார் வேதாசலம்.

வள்ளல் தாமோதரம் பிள்ளையின் வீடு வந்தவர்களையெல்லாம் வரவேற்கும் வீடு என்று எண்ணியிருந்த வேதாசலத்தை வாசலில் உட்கார்ந்திருந்த ஒரு முரட்டு மனிதன் உள்ளே விட மறுத்து விட்டான்.

என்ன செய்வது என்று தெரியாமல் வேதாசலம் ஏங்கிக் கொண்டிருந்த சமயத்தில், ஒரு கார் வாசலில் வந்து நின்றது. உடனே 'கேட்'டைத் திறந்து விட்டு, அந்தக் காரில் உட்கார்ந்திருந்த மனிதருக்கு ஒரு 'சலா'மும் போட்டு விட்டு நின்றான் வாசற்காப்போன்.

இந்தச் சமயத்தில், "நாம் கூடக் காரில் வந்தால் தேவலை போலிருக்கிறதே!" என்று எண்ணிய வேதாசலம், எப்படியோ காவலாளிக்கு 'டிமிக்கி' கொடுத்து விட்டு, உள்ளே சென்றார்.

உள்ளே சென்றதும் "தங்களுடைய பெயரைக் கேள்விப்பட்டு வந்தேன். நான் ஒரு ஏழை...." என்று ஏதோ சொல்ல வாயெடுத்தார் வேதாசலம்.

"ஏழை, கோழை! போம், ஐயா! வேறு வேலை கிடையாது? டேய்! யார் இவரை உள்ளே விட்டது?" என்று கடுமையாகப் பேசினார் திவான்பகதூர்.

"தாங்கள் எத்தனையோ தான தருமம் செய்திருக்கிறீர்கள். நான் கேட்கும் அந்த மனிதருக்கு உதவி செய்தால் எவ்வளவோ புண்ணியமுண்டு" என்று பல்லைக் காட்டினார் வேதாசலம்.

"என்ன, ஐயா! ஒருதரம் சொன்னால் கேட்கமாட்டீரா? போம்!"

இந்தச் சமயத்தில் 'சூட்'டையும் 'பூட்'டையும் போட்டுக் கொண்டு ஒருவர் உள்ளே நுழைந்தார். அவர் வந்ததும் வராததுமாக, "நம்ம 'கிளப்'பிலே நாளைக்கு ஒரு 'டீ பார்ட்டி.' நீங்கள்தான் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்" என்றார்.

உடனே, "இதென்ன, பிரமாதம்? இதற்கு நீங்களே வரவேண்டுமா, என்ன?" என்று சொல்லிக்கொண்டே ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து அலட்சியமாக அவரிடம் கொடுத்தார் திவான்பகதூர்.

இதைப் பார்த்த வேதாசலத்திற்கு வயிற்றை எரிந்தது. "கேவலம், ஒரு ஏழைக்கு உதவி செய்வதென்றால் மேலேயும் கீழேயும் பார்க்கிறார்! காரில் வந்த மனிதருக்கு மட்டும் நூறு ரூபாயை எடுத்து அலட்சியமாகக் கொடுக்கிறார்! எல்லாம் பெயருக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டுத்தான் தான தருமம் போலிருக்கு!" என்று வேதாசலம் எண்ணிக் கொண்டிருந்தபோது, "என்ன, ஐயா! ஏன் நிற்கிறீர்? மரியாதையுடன் போகமாட்டீரா?" என்று மறுபடியும் கத்தினார் பிள்ளைவாள்.

"கொஞ்சம் மனமிரங்க வேண்டும். பாவம், பிள்ளை குட்டிக்காரன். இரண்டு மூன்று மாதமாக வீட்டு வாடகை நின்றுவிட்டது. வீட்டுக்காரன் வீட்டைக் காலி பண்ணச் சொல்லுகிறான். ஒரு இருபது ரூபாய் கொடுத்தால் போதும்" என்று ரொம்பவும் கெஞ்சினார் வேதாசலம்.

இதைக் கேட்டதும் பிள்ளைவாளின் மனம் பேதலித்து விட்டது. "யார் அந்த மனிதர்? அவரை இங்கே வரச் சொல்லும், பார்க்கலாம்" என்றார்.

வேதாசலம் சற்று திடுக்கிட்டுநின்றார். பிறகு ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "அவன் என்னத்திற்கு? நான் தான் அந்த வீட்டுக்குச் சொந்தக்காரன். கொடுப்பதை என்னிடமே கொடுத்து விடுங்களேன்!" என்றார்.

திவான்பகதூர் தாமோதரம் பிள்ளை வாயைப் பிளந்த வண்ணம் வேதாசலத்தைப் பார்த்துக்கொண்டு நின்றார்.

படித்துப் பார்!

நர்மதா பி. ஏ.

[ஆசிரியர் : "வஸந்தன்"; கிடைக்குமிடம் : வி. சுப்பிரமணியம், "கல்கி" ஏஜெண்ட், திருச்சி ; விலை : ரூ. 2—0—0.]

இந்த நூலின் ஆசிரியர் "வஸந்த"னைப் போல் பேராசை பிடித்த மனிதரைக் காண்பது துர்லபம் என்று தோன்றுகிறது. ஊரிலுள்ள அழகான நல்ல பெயர்களையெல்லாம் இந்த "வஸந்தன்" தம்முடைய கதாநாயகிகளுக்கே வைத்து விட்டால், மற்ற ஆசிரியர்கள் எல்லாம் என்ன செய்வதென்று தெரியவில்லை.

இந்தப் புத்தகத்திலடங்கிய கதைகளில் வரும் கதாநாயகிகளின் பெயர்களைச் சற்றே கேளுங்கள் :—(1) நர்மதா, (2) மஞ்சுளா, (3) ஜகதா, (4) செண்பகம், (5) ராஜ்யஸ்ரீ (6) செந்தாமரை, (7) விமலா, (8) கமலா, (9) வத்ஸலா, (10) சூடாமணி, (11) காஞ்சனா, (12) தேவகி, (13) சாந்தா, (14) ஊர்மிளா, (15) லலிதா, (16) பிரதிபா!

கதா நாயகிகளுக்கு இவ்வளவு அழகான பெயர்களைத் தேடிப் பொறுக்கி வைக்கக் கூடியவர் கதைகளை எவ்வளவு அழகாக எழுதியிருப்பார் என்று சொல்ல வேண்டியதில்லை. ஊற்றுப் பெருக்குப் போன்ற இனிய எளிய சரளமான தமிழ் நடையில் எழுதப் பெற்ற ரஸமான கதைகள் 16 இந்நூலில் அடங்கியிருக்கின்றன. இக் கதைகளின் கதாநாயகிகள் உடுத்தியுள்ள அழகிய நாகரிக உடைகளைப் போலவே, இப் புத்தகத்தின் அட்டையும் அழகில் இணையற்று விளங்குகிறது.

இந்தக் காகித கிராக்கி நாளில், 194 பக்கமுள்ள இந்த நூலுக்கு விலை ரூ. 2—0—0 மிகவும் சரசம் என்றே சொல்ல வேண்டும்.

ஸௌந்தர்ய லஹரி

[ஆதி சங்கரர் அருளியது ; பதவுரை, வியாக்கியானம் எழுதியவர் : சாஸ்திர ரத்தினம் தேதியூர் சுப்ரமண்ய சாஸ்திரிகள் ; பிரசுரம் : கிரி பிரதர்ஸ், திருவல்லிக்கேணி, சென்னை ; விலை : ரூ. 6.]

பிரசித்தி பெற்ற 'ஸௌந்தர்ய லஹரி' என்னும் நூலைப்பற்றி எல்லாரும் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் பெரும்பாலோர் படித்ததில்லை. தேவியின் ஸௌந்தரியத்தைப் பாதாதிகேச பரியந்தம் அற்புதமாக வர்ணிக்கும் நூறு சுலோகங்கள் அடங்கியிருக்கின்றன இந் நூலில். ஒவ்வொரு சுலோகத்துக்கும் பதவுரையும், இரண்டு பக்கங்களுக்குக் குறையாமல் வியாக்கியானமும் எழுதப்பட்டிருக்கின்றன.

தேவி உபாசகரும் ஸ்ரீ வித்தையில் நிபுணருமான தேதியூர் சுப்ரமண்ய சாஸ்திரியார், வேதங்களிலிருந்தும் உபநிஷதங்களிலிருந்தும் பல உதாரணங்களை அள்ளி யெறிந்து வியாக்கியானத்தை வெகு அழகாகச் செய்திருக்கிறார்.

அகிலாண்ட கோடிப் பிரம்மாண்ட நாயகியான ஆதிபராசக்தியின் அற்புத ஸௌந்தர்யத்தையும் மகிமையையும் பற்றி ஆதி சங்கரரை யல்லாமல் வேறு யாராலும் எடுத்துச் சொல்ல இயலாது. வேத வேதாந்த பாரங்கதரும் சாஸ்திர ரத்தினமுமான தேதியூர் சுப்ரமண்ய சாஸ்திரியாரைத் தவிர வேறு யார் அப்பேர்ப்பட்ட நூலுக்கு வியாக்கியானம் எழுத முடியும்?

ஸம்ஸ்கிருதம் தெரிந்தவர்கள், தமிழ் மட்டும் தெரிந்தவர்கள் எல்லோருமே பாராயணம் செய்யும்படி, நாகர எழுத்திலும், கிரந்த எழுத்திலும், தமிழ் எழுத்திலும் சுலோகங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன.

திருக்கழுக்குன்றக் கோவை

[ஆசிரியர் : ராமநாதபுரம் சோமசுந்தரக் கவிராயர் ; பதிப்பாசிரியர் : எஸ். கல்யாணசுந்தர ஐயர் ; கிடைக்குமிடம் : 67. "தியாகராஜ விலாசம்," பிள்ளையார் கோவில் தெரு, திருவட்டீசுவரன் பேட்டை, சென்னை ; விலை : ரூ. 2.]

மகா மகோபாத்தியாய டாக்டர் சுவாமிநாதய்யர் அவர்கள் தமிழ்த் தாய்க்குச் செய்த அரும் பணியை அவர் குமாரர் ஸ்ரீ கல்யாண சுந்தரமய்யர் தொடர்ந்து நடத்துவதறிந்து பெரிதும் மகிழ்கிறோம்.

நீள அகலம்

"என்னய்யா, அந்த இரண்டு பேரும் அப்படி கையை வைத்துக்கொண்டு போகிறார்கள்!"

"அதுவா? வீட்டில் ஏதோ படத்துக்குச் சட்டம் வாங்கிக் கொண்டுவரச் சொல்லியிருக்கிறார்கள். ஒருவன் படத்தின் நீளமும், இன்னொருவன் அதன் அகலமும் அளவு எடுத்துக் கொண்டு போகிறார்கள்."





ஸொர்...ஸொர்...

சமையல் சங்கீதம் ஆரம்பமாகிவிட்டது

நமது சமையலறைகளின் இருளும், நிசப்தமும் ஒழிந்தன. காமதேனு வந்தது; பொரியலும் சமையலும் பரபரவென்று நடக்கின்றன. ஆகா! என்ன ருசியான லட்டு, ஜாங்கிரி, பேணி, உப்புமா, வொஜ்ஜி பஜ்ஜி! வாருங்கள் வேண்டியமட்டும் சாப்பிடலாம்! கசிவற்ற, மணமற்ற பொரியல் சாதனமான காமதேனு சமையலுக்கு மிகச்சிறந்தது. ஆரோக்கியமளிக்கும் வைடமின்கள் மிருந்தது. உயர்தர நெய்யைப் போன்று மணல் மணலாக உள்ள காமதேனு பரிசுத்தமானது, கைபடாதது. 4 காலன், 10 பவுண்டு, 5 பவுண்டு கொண்ட சீல் வைத்த டின்களில் விற்கப்படுகிறது. காமதேனுவை உபயோகிப்பதால் சிக்கனமும் உண்டு; நெய், வெண்ணெயைப் போன்று குணமுள்ளதாயினும் விலையில் மட்டும் மலிவு.



சிறந்த சமையற்காரர்கள்
வேண்டுவது

காமதேனு



வனஸ்பதி

தயாரிப்பவர்கள்:

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்

மேட்டூர்டாம் — தென்னிந்தியா

KVK.2.Tm.

மானேஜிங் ஏஜண்டுகள்:
சேஷசாயி பிரதர்ஸ் லிட்.,
திருச்சிராப்பள்ளி.

சோல் விற்பனை ஏஜண்டுகள்:
அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிபியூடர்ஸ்
லிட்., 120, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.

"நேக்கும் இலையே போடு, அம்மா! ஏன் தட்டுக்கும் பாலிஷ் போட்டுத் தரையா?"

"எதற்கடா? உன் தட்டுத்தான் புதுக் கறுக்கழியாமே அப்படியே இருக்கே."


"ஊஹூம்......என் தட்டிற்கும் பாலிஷ் போடணும். இல்லாவிட்டால் லலிதாவின் தட்டு ரொம்பப் புதுசாத் தோணுமே!"

"இல்லைடா, சும்மாச் சொன்னேன். இப்போ அவள் தட்டிற்குப் பாலிஷ் ஏது?" என்று அம்மா கிட்டுவுக்குக் கண் சிமிட்டி மௌனமாக ஜாடை காட்டினாள்.

இவ்விதத் தகராறுகள் இல்லாமல் ஒரு நாள் கூட சாப்பாடு முடிவுறாது.

* * *

சென்னையில் உத்தியோகமாக இருந்த மாமா சுப்பு, நான்குநாள் லீவில் தமக்கை அகத்திற்கு வந்திருந்தான். இவர்களின் அசாத்தியச் சண்டையைக் கண்டு வியப்புற்றான். மாமா சுப்பு சென்னையிலிருந்து வரும்போது கிட்டுவுக்குப் பௌண்டன் பேனாவும் லலிதாவுக்கு ஒரு ஜதை செருப்பும் வாங்கி வந்திருந்தான். கிட்டுவுக்கு இரண்டும் வேண்டுமென்று ஆசை. லலிதாவிற்கும் அதுதான் ஆசை. லலிதாவின் செருப்புகள் அவள் பாத அளவிற்குக் கொஞ்சம் பெரிதாக இருந்தது. கிட்டுவுக்கு அளவு சரியாக இருந்தது. அதைத் தனக்கே கொடுத்து விட வேண்டுமென்பது கிட்டுவின் விருப்பம். அடுத்த தடவை அவளுக்கு வேறொரு ஜதை வாங்கிக்கொண்டு வந்து கொடுத்து விடும்படி அவன் மாமாவுக்கு யோசனை கூறினான். ஆனால் அவற்றை லலிதா கிட்டுவுக்குக் கொடுக்க மறுத்து விட்டாள்.



"ஐயையே! இவ்வளவு பெருசைப் போட்டுண்டு போனால் எல்லாரும் உன்னைப் பார்த்துச் சிரிப்பாளே!"

"தேவலை! நான் எப்படிப் போனால் உனக்கென்னவாம்?"

சண்டை வலுத்தது. கிட்டுவுக்கு அப்பாவிடமிருந்து நான்கு பூசைகளும் கிடைத்தன. மறு நாள் அப்பா ஆபீசிற்குக் கிளம்பும்பொழுது பார்த்தால் அவர் சைக்கிள் பஞ்சர்!

அதற்கடுத்த நாள் காலை ரயிலில் மாமா சுப்பு சென்னைக்குத் திரும்ப இருந்தான். அன்று இரவு போஜனம் முடிந்த பிறகு அம்மா, அப்பா, மாமா மூவரும் கூடத்தில் சம்பாஷித்த வண்ணம் உட்கார்ந்திருந்தனர். கிட்டுவும், லலிதாவும் தூங்கப் போனார்கள்.

"அக்கா! இதுகள் இப்படி அநியாயச் சண்டை பிடித்துக் கொள்கிறதுகளே, நான் கிட்டுவை அழைச்சுண்டு போய்க் கொஞ்ச நாள் என்னிடம் வைத்துக் கொள்கிறேனே?" என்றான் மாமா.

"ஆமாண்டா, சுப்பு! அதுதான் சரி. என்ன சொல்றயள்? ஒரு வயிற்றில் பிறந்துவிட்டு இப்படிச் சண்டைபோடுகிறதுகளே! வெட்கக் கேடு, சுத்த வெட்கக் கேடு! ஒருவரை விட்டு ஒருவர் கொஞ்ச நாள் பிரிந்திருந்தால்தான் புத்தி வரும்" என்றாள் அம்மா.

"அது சரிதான். கூட்டிண்டு போயேன், சுப்பு! யார் வேண்டாமென்கிறது?" என்றார் தகப்பனார்.

இந்தச் சம்பாஷணையைக் கேட்டதும் கிட்டுவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. தான் தங்கையைச் சண்டை பிடிக்கக் கொண்டுதானே மாமா தன்னைத் தங்கையிடமிருந்து பிரித்து ஊருக்கு அழைத்துக்கொண்டு போகிறேன் என்று சொல்கிறார் என்று நினைத்தான். தங்கையை விட்டுப் பிரிய வேண்டுமே என்று நினைத்தபோது அவன் கண்களில் கண்ணீர் துளித்தது.

அடுத்த நாள் பொழுது விடிந்ததும் மாமா கிட்டுவைக் கூப்பிட்டு, "கிட்டு, நான் உன்னை மாத்திரம் என்னுடன் ஊருக்கு அழைத்துக்கொண்டு போகப் போகிறேன். உன் சாமான்களையெல்லாம் எடுத்து வைத்துக் கொள்" என்றார். இதைக் கேட்டதும் கிட்டு சந்தோஷத்தால் துள்ளிக் குதிப்பான் என்று தான் மாமா எதிர்பார்த்தான். ஆனால் கிட்டு சொன்ன பதில் மாமாவை மாத்திரம் அல்ல, அப்பா, அம்மா எல்லாரையுமே தூக்கி வாரிப் போட்டது!

"என்னை மாத்திரம் அழைச்சிண்டு போறதாயிருந்தால் நான் வரல்லே மாமா. என்னோடு தங்கையையும் அழைத்துக் கொண்டு போகணும்" என்றான் கிட்டு!

தமிழ் வென்றது

ஸ்ரீ சுத்தானந்தபாரதி

பெருஞ்சேரல் (இரும்பொறை) வீரப் புகழ் பெற்ற மன்னன்; அவனை எவரும் வெல்ல முடியாது; யாருக்கும் அவன் பணிந்ததில்லை. அவன் வாள் எத்தனையோ பகைவரை வென்றது. அவனை வென்றது ஒன்றே — தமிழே. எத்தனையோ மன்னர் அவனை வணங்கிக் கப்பங் கட்டினர்; அவன் வணங்கிக் கப்பங் கட்டும் மன்னர் ஒருவரே — கவி மன்னர். மோசுகீரனர் அக் காலக் கவியரசர். அவர் அஞ்சா நெஞ்சுரங் கொண்ட செஞ்சொற் கவி.

மோசுகீரனர் ஒரு நாள் அரசனைக் காண வந்தார். நெடுந் தொலை நடந்ததால் அவர் களைத்திருந்தார்; அரண்மனை வாசலில் மூன்று முரசுகள் உண்டு —வீர முரசு, கொடை முரசு, மண முரசு. தமிழரசர் தமது கொடியைப் போலவே முரசுகளையும் உயிரெனக் காத்தனர்; அவற்றை வீரர் கட்டிலில் வைத்து மாலை சூட்டி வணங்கினர். அன்று வீர முரசை நீராட்ட எடுத்துச் சென்றிருந்தனர் படைவீரர். அதன் கட்டில் காலியாயிருந்தது. மோசுகீரனர் அதில் காலை விரித்துப் படுத்து நன்ருக உறங்கிப் போனர். வேருெருவர் அப்படிச் செய்திருந்தால் மீளா உறக்கந்தான்!

வீரமுரசு இதோ வந்து கொண்டிருக்கிறது; அதைக் கட்டிலிலேற்றிக் காண அரசன் பெருஞ்சேரல் அங்கே வந்தான். பார்த்தான் புலவரை. "அரசு கட்டிலில் அரசன்; முரசு கட்டிலில் முரசு. தவிர வேறெவரும், எதுவும் இருக்கக்கூடாது; புலவருக்கு இவ்வளவு செருக்கா?" என்றெல்லாம் படை வீரர் சீறினர். அரசன், "வீரர்காள்! என் அரசு கட்டிலும் முரசு கட்டிலும் பெருமை பெறுவது கவி வாணரால்; அரசுடன் செல்வமும் பேரும் புகழும் மின்னெனப் போம்; ஒரு அரிய கவி என்றுமிருக்கும்; கவிதையே நம்மை நீடு வாழ வைப்பது; கடவுளுக் கடுத்தபடி கவிகளையே நாம் வணங்க வேண்டும்" என்று வீரரை அமைதியாக்கினன். பிறகு அருகிலிருந்த வெண்சாமரத்தை எடுத்து "களைப்புடன் வந்தீரோ, புலவரே! நன்ருய் உறங்கும்" என்று காற்ருட வீசினன்.

திடீரென்று புலவர் விழித்து மன்னன் செயலைக் கண்டு திடுக்கிட்டார். "அரசே! நெடுந் தொலை நடந்த களைப்பால் இடந் தெரியாது உடல் உறங்கியது. மன்னிக்க வேண்டும்" என்ருர். "இன்று தமிழ்வாணிக்குத் தொண்டு செய்யும் பேறு கிடைத்தது" என்று புலவருக்கு வேண்டிய சன்மானமளித்தான் அரசன். புலவர் மன்னனைத் தன் வாக்கினல் என்றும் வாழச் செய்தார். "மாசற விசித்த" என்னும் புறநானூற்றுக் கவி இம்மன்னனைச் சிறப்பிக்கிறது.

அரசுபோம்: செல்வம்
அனைத்தும்போம்: ஆர்த்த
முரசுபோம்: கால முடிவில் — உரைசால்
புலவர் கொடுத்த புகழ்மாலை என்றும்
உலராது காக்கும் உயிர்.

★

பதிலுக்குப் பதிலா?

"நீ கொடுக்க வேண்டிய, இரண்டு மாசத்துக்கு முன்னே கை மாத்தா வாங்கிண்ட ஒத்தை ரூபாயை எப்போ கொடுக்கப் போறேன்?"

"தரேன், ஸ்வாமி!"

"எப்போதும் இந்த பதிலையே சொல்றேனே!"

"நீர் மாத்திரம் எப்போதும் இந்தக் கேள்வியையே கேட்கிறீரே!"

★



குழந்தைகள் சண்டை

ஜயம்

"அம்மா! அண்ணா அடிச்சுட்டாண்டீ! ஊம்ம்ம்ம்ம்......!"

"அவள் ஏன் என் புஸ்தகத்தைத் தொடணுமாம்?"

"புஸ்தகத்தைத் தொட்டுவிட்டால் குடி முழுகிப் போய்விட்டதாடா? இதற்காக இப்படிப் போட்டுக் குழந்தையை அடிக்கணுமா கழுதை! போயும் போயும் உனக்குத் தங்கையா வந்து பிறந்தாளே, அதைச் சொல்......"

கிட்டுவுக்கு அம்மாவிடமிருந்து பதில் பூசை கிடைத்தது.

"கண்ணா! மாமா பெப்பர்மெண்ட் கொணர்ந்திருக்கான். வாங்கிக்கோடீ; கண்ணா! அண்ணா கிடக்கிறான்" என்று குழந்தை லலிதாவைச் சமாதானம் செய்தாள் தாயார்.

"மாமா! நேக்கு மாத்திரம் கொடு; அண்ணாவுக்குக் கொடுக்காதே. அவன் தான் என்னை வெறுமனே அடிக்கிறானே?" என்று லலிதா தன் தளிர்க் கையை மாமாவின் பக்கம் நீட்டினாள்.

"அம்மாதான் அவனை அடிச்சுட்டாளே" என்று மாமா இருவர் கையிலும் இரண்டிரண்டு பெப்பர்மெண்ட் வைத்தான்.

"எனக்குக் கொடுப்பதும் விடுவதும் உன்னைக் கேட்டுத்தான் செய்யணுமோ, மகாராணி? வெவ்வெவ்வே" என்று லலிதாவை நையாண்டி செய்து கொண்டே ஓடிவிட்டான் கிட்டு. லலிதாவும் விளையாடச் சென்றாள்.

ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் மறுபடியும் லலிதாவின் அழுகுரல். "மாமா! என் பெப்பர்மெண்டையெல்லாம் அண்ணா பிடுங்கிண்டுட்டான். ஊம்ம்ம்" என்று ராகம் இழுத்த வண்ணம் திரும்பி வந்தாள் லலிதா.

"டேய், வாண்டுப் பயலே! இங்கே வா, சொல்கிறேன்" என்று கிட்டுவை விரட்டிய வண்ணம் மாமா சுப்பு திரும்பவும் லலிதாவிற்குப் பெப்பர்மெண்ட் கொடுத்துச் சமாதானம் செய்தான்.

* * *

சாப்பிடும் சமயத்தில் மற்றொரு அத்தியாயம் ஆரம்பம். "அம்மா! என் தட்டை நகக்கிட்டான், அண்ணா!" என்று ஒரு குரல் எடுத்தாள் லலிதா.

"அவள் ஏன் என் தட்டை எடுத்துக் கொண்டாள்?"

"ஏண்டீ, லலிதா! ஆனாலும் அநியாய வம்புக்கு அலைகிறாயம்மா! அவன் தட்டை ஏன் எடுக்கிறாய்?" என்றாள் தாயார், அன்னத்தைத் தட்டில் தோண்டிக் கொண்டே.

"அண்ணா தட்டுத் தான் பாலிஷ் போகாமல் பளபள வென்றிருக்கு. அதான் நேக்கு வேணும்!"

"ஊஹூம், நான் கொடுக்க மாட்டேன்."

"ஊம், நேக்கு அதுதான் வேண்டும்.'

"மாட்டேன், போ!"

"ஐயயோ! அம்மா, தட்டை அண்ணா பிடுங்கிண்டுட்டானே!"

"அட இழவே! பொழுது விடிந்தால் பாதி ராத்திரி மட்டும் உங்கள் சண்டை தான். ஏண்டீ லலிதா! சொன்னால் கேட்பதில்லை. 'நான் தேய்க்கிறேன், நான் தேய்க்கிறேன்' என்று கல்லையும் மண்ணையும் போட்டு வெள்ளித் தட்டைக் கண்டபடி தேய்த்தால் எப்படி பாலிஷ் நிற்குமாம்? நாளைக்கு சுப்பாச்சாரியிடம் கொடுத்து பாலிஷ் போட்டுத் தரேன். இந்தா, இப்போ இலையைப் போட்டுக் கொள்."





ஆனந்தமாக லிப்டன் தேனீர் அருந்தும்போது பொறுப்பற்ற பேச்சுகளைப் பேசாதீர்கள்.

கார்த்தேன். ‘கூக்கு’வென்று கூவி, ரயில் தான் கிளம்பப் போவதை அறிவித்தபோது, “முல்லை மொக்! முல்லை மொக்!” என்று ஒரு பூக்காரன் கூவிக்கொண்டே வந்தான்.

“இந்த முல்லையில் ஒரு படி மொட்டை வாங்கிக் கொண்டுபோய், அவள் தலையில் கொட்டி அபிஷேகம் செய்தால் என்ன?” என்று நினைத்தேன். உடனே அவனைக் கூப்பிட்டு ஒரு படி மொட்டையும் வாங்கிக் கொண்டேன்.

அதற்குப் பிறகு, “ஆமாம், இதை எப்படி அவள் தலையில் கொட்டுவது?” என்ற யோசனை தோன்றி என்னை வதைத்தது. “போகும்போது அவள் வீட்டுக் கொல்லைப் பக்கமாகப் போவது; வழியில் சந்தித்தால் அவள் தலையில் கொட்டுவது; இல்லாவிட்டால் தங்கை இருக்கவே இருக்கிறாள்!” என்று கடைசியில் தீர்மானித்துக் கொண்டேன்.

4

நான் அவள் வீட்டை நெருங்கிய போது அந்தி வேளையாகி விட்டது. அதிர்ஷ்ட வசமாக அவளும் நான் நினைத்த படி கொல்லைப் பக்கத்தில்தான் இருந்தாள். துள்ளித் துள்ளி ஓடும் எருமைக் கன்றைப் பிடித்துக் கட்ட எத்தனித்துக் கொண்டிருந்த அவள் என்னைக் கண்டதும், “அன்றைக்கு முல்லைக் கொடியைப் பிடித்துக் கொடுத்தீரே, இன்றைக்கு இந்த எருமைக் கன்றைப் பிடித்துக் கொடுங்களேன், பார்க்கலாம்” என்றாள்.

அவள் ஏமாந்தால் தன் தாயின் மடியில் இருக்கும் பாலை யெல்லாம் குடித்து விடலாமென்று எண்ணங் கொண்டிருந்த அந்த எருமைக் கன்று, சிறிது நேரம் என்னை ஆட்டிப் படைத்த பிறகு, என்னிடம் சிக்கிக் கொண்டது. அவள் அதைப் பிடித்துக் கட்டிக் கொண்டே, “நல்ல சமயத்தில் வந்து சேர்ந்தீர்கள்” என்றாள்.

“நல்ல சமயமா? என்னத்திற்கு?” என்று கேட்டேன்.

“நீங்கள் பட்டணத்துப் பணக்கார ராஜா! நானோ பட்டிக்காட்டு ஏழைப் பெண். என்னுடைய கல்யாணத்தின் போது நீங்கள் வருகிறதாயிருந்தால், அது நல்ல சமயந் தானே?”

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. “உனக்கா கல்யாணம்? எப்பொழுது? எங்கே?” என்று பரபரப்புடன் கேட்டேன்.

“நாளைக்கு! நம்ம ஊர்க் காத்தவராயன் சத்திரத்திலேதான்!” என்று அவள் சாவதானமாகப் பதில் சொன்னாள்.

எத்தனையோ நாட்களாக என் உள்ளத்தில் எரிந்து கொண்டிருந்த ஆசைத் தீ, அதைக் கேட்ட மாத்திரத்தில் அணைந்து விட்டது. இதற்குத்தானா அவள் என்மீது அத்தனை அன்பு காட்டினாள்? அந்த அன்பின் அர்த்தம்தான் என்ன? அதெல்லாம் வெறும் விளையாட்டுத்தானா? அப்படியானால் அந்தக் குறும்புக்காரியின் சாகஸம் என் வாழ்க்கையை எவ்வளவு தூரம் பாதித்து விட்டது!

என்னை நானே ஏமாற்றிக் கொண்டு விட்டேன். என் மனம் அமைதியை இழந்து விட்டது. தங்கையின் வீட்டைக் கூட மறந்து வந்த வழியே திரும்பினேன். அவள், “எங்கே போகிறீர்கள்?” என்று கேட்டாள்.

நான் அவளைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. ஏன் திரும்பிப் பார்க்கவேண்டும்? அவளுக்குப் பதில் சொல்லி இனிமேல் எனக்கு என்ன ஆகப்போகிறது? இல்லை, நான் பதில் சொல்லி அவளுக்குத்தான் என்ன ஆகப்போகிறது?

அருகிலிருந்த ஆலமரத்தடிக்கு ‘விறு விறு’ வென்று நடந்து சென்றேன். அதற்குக் கீழே வீற்றிருந்த விநாயகரின் தலைமேல் அவளுக்காக வாங்கி வந்திருந்த முல்லை மொட்டுகளை யெல்லாம் கொட்டி அபிஷேகம் செய்தேன். அந்த விக்கிரகத்துக்கு எதிரே கைகூப்பி வணங்கி, “உம்மைப் போல் என்றும் பிரம்மசாரியாக இருக்கும் மனோ வலிமையை எனக்குக் கொடுங்கள், சுவாமி!” என்று வேண்டிக் கொண்டேன்.



முல்லைக் கொடியாள்

விந்தன்

'சோ' வென்று பெய்துகொண்டிருந்த சித்திரை மாதத்துச் செல்வ மழை அப்பொழுதுதான் விட்டது. துன்பப் பேயைத் தூக்கிக்கொண்டு வந்த 'ஜில்' லென்ற காற்று, இன்பத் தேனை எல்லோருக்கும் பரிமாறிக் கொண்டு சென்றது. மழைக்குப் பதுங்கியிருந்த பட்சி ஜாலங்கள் 'பட பட' வென்று தங்கள் சிறகுகளை அடித்துக் கொண்டு கிளம்பியபோது, அவற்றிலிருந்து நீர் முத்துக்கள் 'பொல பொல' வென்று உதிர்ந்தன. அப்பொழுது சண்டமாருதத்தால் தாக்குண்ட தாவரத் தழைகள், 'தகிங்கிணதோம்' என்று தாண்டவமாடின. அந்த ஆனந்த நடனத்திலிருந்து கிளம்பிய அற்புத கீதம், என்னை அறையை விட்டு வெளியே வரச் செய்தது.

திண்ணைக்கு வந்தேன். அந்தக் கிராமத்திற்கே ஒரு தனி அழகைக் கொடுத்துக் கொண்டிருந்த வெளுத்த வானம் கண் கொள்ளாக் காட்சியா யிருந்தது. நான் இருந்த வீட்டுக்கு எதிர் வீட்டில்தான் அவள் இருந்தாள். அந்த வீட்டுக்கு முன் பக்கத்தில் கட்டியிருந்த வேலி மீது முல்லைக் கொடி படர்ந்திருந்தது. சந்திரன் தலை காட்டியிருந்த சமயம். அவள் வெளியே வந்தாள். வேறெதற்கு? பூப் பறிக்கத்தான்.

என்னைப் போல் அந்த முல்லைக் கொடிக்கும் அவளுடன் விளையாட வேண்டுமென்று வெகு நாள் ஆசை போலிருக்கிறது. அவளுக்கு எட்டாத உயரத்திலிருந்த அந்தக் கொடியில் முல்லை மலர்கள் அரும்பியிருந்தன. மந்த மாருதத்தில் அந்த முல்லைக்கொடி மெல்ல அசைந்தாடிக் கொண்டிருந்தது. அது தன்னை நெருங்கி வரும்போது, அவள் துள்ளிக் குதித்து அதை எட்டிப் பிடிக்க முயல்வாள். அவளைச் சிரிக்க வைத்து அழகு பார்ப்பதைவிட, அழ வைத்து அழகு பார்ப்பதில் அந்தக் கொடிக்கு ஆனந்தம் அதிகம் போலிருக்கிறது. இல்லாவிட்டால் அது ஏன் அவளை அப்படி ஏமாற்றி விட்டு அத்தனை உயரத்தில் போக வேண்டும்? — அவளும் அதை விடவில்லை; அதுவும் அவளை விடவில்லை! — இந்த வேடிக்கையைப் பார்த்து அவளுடைய கை வளையல்கள் 'கல கல' வென்று நகைத்துக் கொண்டிருந்தன!

அதென்னமோ இந்த ஆண்களுக்குப் பெண்களைக் கண்டாலே ஒரு விதமான பச்சாத்தாபம் உண்டாகிவிடுகிறது! அதற்கு நான் மட்டும் விதி விலக்கா என்ன? எனக்கும் அவள் மீது பச்சாத்தாபம் உண்டாயிற்று. எழுந்து சென்றேன். அந்தக் கொடியைப் பிடித்து இழுத்து அதிலிருந்த முல்லை மொட்டுகளையெல்லாம் பறித்து அவளிடம் கொடுத்து விட்டு வந்தேன்.

அப்பொழுது அவள் என்னைப் பார்த்த பார்வை நன்றியுடன் பார்த்ததா யில்லை. அதென்னமோ மாதிரியா யிருந்தது! அவள் ஏன் என்னை அப்படிப் பார்த்தாள்?

2

கோடை விடுமுறை மணிக்கொருதரம் வராவிட்டாலும் மாதத்திற்கொருதரமாவது வரக் கூடாதா? அதுதான் இல்லை. வழக்கம் போல் அது வருடத்திற்கொரு முறைதான் வந்தது. நானும் வழக்கம்போல் என் தங்கையின் கிராமத்திற்குச் சென்றேன். அந்த முல்லைக் கொடியாளும் அக் கிராமத்தில்தான் இருந்தாள்.



நான் போன சமயம் என் தங்கை வீட்டில் இல்லை. கதவு மூடி யிருந்தது. சுற்று முற்றும் பார்த்து 'திருதிரு' வென்று விழித்துக் கொண்டிருந்தேன். அவள் வந்தாள்.

யார் முதலில் பேசுவது?

சிறிது நேரம் இருவரும் மௌனமா யிருந்தோம்.

இப்படியே எவ்வளவு நேரம் இருக்க முடியும்? நான்தான் முதலில் "இவர்கள் எங்கே?" என்று அவளை விசாரித்தேன்.

"என்னைக் கேட்டால்?" என்று கேட்டு விட்டு, அவள் உள்ளுக்குள்ளேயே சிரித்துக் கொண்டாள்.

"பின் எதற்காகத்தான் இங்கே வந்தாய்?"

"அதைச் சொல்லத்தான்!"

"சொல்லேன்."

அவள்தான் அழகு என்றால், அவளுடைய பேச்சிலுமா அந்த அழகு வந்து தொலையவேண்டும்?—அழகும் ஆசையும் கூட ஒருவிதமான 'லாகிரி'தானே? அவற்றை அநுபவிக்க அநுபவிக்க எனக்கு ஒருவிதமான போதையும் அதிகரித்தது போலிருந்தது. அப்பொழுது என் இருதயத்தில் எழுந்த இன்ப உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு பேசாமலிருந்தேன்.

அவளே சிறிது நேரத்திற்குப் பிறகு, "அவர்கள் திருநாளுக்குப் போயிருக்கிறார்கள்" என்றாள்.

"எப்பொழுது வருவார்கள்?" என்று கேட்டேன்.

"நாளைக்கு!"

"அட, ராமா! நான் எங்கே போவது?"—ஒன்றும் தோன்றாமல் வந்த வழியே திரும்பினேன்.

அவள், "எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"தெரியவில்லை!" என்றேன்.

"பைத்தியந்தான்! எங்கள் வீட்டுக்கு வாருங்கள்!" என்றாள்.

அந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளாம லிருக்க அவள் சொல்வதுபோல் எனக்கென்ன பைத்தியமா? சென்றேன். எனக்கு முன்னால் அவள் 'திடுதிடு' வென்று ஓடி உள்ளே யிருந்து ஒரு செம்பு ஜலம் கொண்டு வந்து, "காலைக் கழுவிக் கொள்ளுங்கோ!" என்றாள்.

அதை வாங்கிக் கொண்டு நான் வாசலுக்கு வந்தேன். உள்ளே யாரோ, "அது யார் அம்மா?" என்று கேட்டது போலிருந்தது.

"எதிர்த்த வீட்டு அம்மாளின் அண்ணா! ஊரிலிருந்து வந்திருக்கிறார்!" என்று சொன்னாள் அவள்.

"ஐயோ, பாவம்! அவர்கள் திருநாளுக்குப் போயிருப்பது அவருக்குத் தெரியாது போலிருக்கிறது. முதலில் அவருக்குச் சாப்பாடு போடு, அம்மா! எப்பொழுது சாப்பிட்டு வந்தாரோ, என்னமோ!"

காலைக் கழுவிக்கொண்டு உள்ளே சென்றேன். அங்கே இருந்த ஒரு கிழவி, "வா, அப்பா! வா" என்று என்னை வரவேற்றாள். அந்தக் கிழவிதான் என்னைப்பற்றி அவளை விசாரித்தது போலிருக்கிறது.

"உங்கள் வீட்டில்கூட ஒருவரும் இல்லையா?" என்று நான் அவளைப் பார்த்துக் கேட்டேன்.

"இல்லை, அவர்களுடன்தான் இவர்களும் திருநாளுக்குப் போயிருக்கிறார்கள். இந்தப் பாட்டியை மட்டும் எனக்குக் காவலாக விட்டு விட்டுப் போனார்கள்!" என்றாள்.

"அவளுக்குக் காவல்!" என்றதும் எனக்குச் சிரிப்பு வந்தது. மனம் இருந்தால் மார்க்கந்தானா இல்லை?—அப்பாவி மக்கள்!

என்னுடன் கிழவியையும் உட்கார வைத்து அவள் சாதம் பரிமாறினாள். பசி தீர்ந்த பிறகு, நான் படுத்துக் கொள்வதற்காகத் திண்ணைக்கு வந்து விட்டேன்.

அவள் தலையணைக்குப் பதிலாக, வைக்கோலைச் சுருட்டிக் கொண்டு என் தலைமாட்டில் வைக்க வந்தாள். என்னிடம் ஏனோ அவளுக்கு அவ்வளவு அக்கறை, தெரியவில்லை! அன்பின் நிமித்தம் அதை வாங்கி வைத்துக் கொண்டேன்.

அப்போது அவளுடைய பெயரைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று எனக்கு ஏனோ ஆசை உண்டாயிற்று. "பெயர் என்ன?" என்று கேட்டேன்.

"மல்லிகா!" என்று சொல்லிவிட்டு, அவள் என்மீது ஒரு விஷமப் பார்வையை வீசி விட்டுச் சென்றாள்.

3

மூன்றாவது சந்திப்புக்கு முந்நூற்று அறுபத்தாறு நாட்கள் காத்துக் கிடந்த பிறகு, அந்த முல்லைக் கொடியாளின் கிராமத்திற்குப் போவதற்காக ரயிலில் ஏறி உட்



சுவரில் நிஜப்புலி உறுமவே அரசன் பயந்து விட்டான்.

அரசனைப் பார்த்த பிரேமாவதி "ஹா ஹா ஹா" என்று சிரித்துக் கொண்டே "இதோ இருக்கும் இப் புஸ்தகத்தின் உதவியால்தான் இவ் வேடிக்கைகள் செய்கிறேன். இப் பொழுது பாருங்கள்! நானும் இப் புஸ்தகமும் மாறப் போகிறோம்" என்று சொல்லிக்கொண்டே புஸ்த கத்தைப் பார்த்து, சில மந்திரங்களைப் படித்தாள். அப்பொழுது பிரேமா வதிக்குப் பதிலாக ஒரு மானும் புஸ்த கத்திற்குப் பதிலாக ஒரு மயிலும் நின் றன. அதைப் பார்த்த அரசனுக்குத் தன் புதல்வியின் கதியை எண்ணித் துக்கம் உண்டாயிற்று. புஸ் தகம் இருந்தாலாவது மந்தி ரங்களைப் படித்துத் தன் புதல்வியை மாற்றி விட லாம் என்று யோசித்தான். ஆனால், என்ன பிரயோ சனம்? புஸ்தகம்தான் மயி லாக மாறி இருக்கிறதே!

மறுநாள் அரசன் ஊர் முழுவதும், யார் தன் பெண்ணை மான் ரூபத்தி லிருந்து அரச குமாரியாக மாற்றுகிறாரோ அவருக்கு அவளைக் கலியாணம் செய்து கொடுத்து விடுவதாகப் பறை சாற்றினான். பல மந்திரவாதிகள் வந்தும் ஒன்றும் பிரயோசனப் படவில்லை. கடைசியில் அரசன் முன் ஒரு கிழ மந்திரவாதி வந்தான். அவன் மானிடம் நெருங்கிச் சில மந்திரங்களை உச்சரித்தான். உடனே, அரசன் ஆச்சரியப்படும் படி, மான் நின்ற இடத்தில் பிரேமா வதி நின்றாள்.

அரசன் அடைந்த சந்தோஷத்திற்கு ஓர் அளவில்லை. ஆனால், மறு நிமிஷம் அவனுக்குத் துக்கம் உண்டாயிற்று. இந்தக் கிழ மந்திரவாதிக்குப் பிரேமா வைக் கலியாணம் செய்து கொடுக்க வேண்டுமே என்றுதான்.

"தங்கள் வாக்குறுதிப்படி ராஜ குமாரியைக் கல்யாணம் செய்து தருகிறீர்களா?" என்று கேட்டான் கிழ மந்திரவாதி.

இதைக் கேட்ட பிரேமாவின் கண் கலங்கி விட்டது. 'ஹோ' என்று அழ ஆரம்பித்தாள். கிழ மந்திரவாதி அந்த சமயத்தில் தன் பொய்த் தாடி மீசையை எடுத்தான்! என்ன அதி சயம்? அவன் ராஜகுமாரிக்கு முதலில் புஸ்தகம் கொடுத்த இளம் மந்திர வாதிதான்!

உடனே அரசன் சந்தோஷங் கொண்டு ராஜகுமாரியை மந்திர வாதிக்குக் கல்யாணம் செய்து கொடுத் தான். வெகு விமரிசையாகக் கல்யா ணம் நடந்தது. இப்பொழுது மந்திர வாதி புஸ்தகத்தைப் பிரேமாவின் கையில் கொடுப்பதில்லை.





மந்திரப் புஸ்தகம்

ராஜீ

வங்க தேசத்து அரண்மனையில் ஒரே கூட்டம். பல தேசத்திலிருந்து மந்திரவாதிகள் வந்திருந்து அரசனுக்கு எதிரில் தங்கள் தங்கள் திறமைகளைக் காண்பித்தார்கள். அரசனுடன் கூட ராஜகுமாரி பிரேமாவதியும் உட்கார்ந்து கொண்டு மந்திரவாதிகள் செய்யும் வேடிக்கைகளைச் சந்தோஷத்துடன் கவனித்துக்கொண்டிருந்தாள். அங்கே வந்த மந்திரவாதிகளுக்குள் ஓர் இளம் மந்திரவாதி வெகு அற்புதமான வேலைகள் செய்து காண்பித்தான். அவனுடைய திறமையைத்தான் யாவரும் கொண்டாடினார்கள். பிரேமாவதிக்கு அம் மந்திரவாதியுடன் பேச வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. அந்த மந்திரவாதியைத் தனியாக அழைத்து ராஜகுமாரி மிகவும் பாராட்டினாள். பிரேமாவதியிடம் விடை பெற்றுச் செல்லும் பொழுது அவள் விருப்பப்படி மந்திரவாதி தன்னிடமிருந்த மந்திர ஜால வித்தைகள் அடங்கிய ஒரு புஸ்தகத்தை அவளுக்குப் பரிசாகக் கொடுத்து விட்டுச் சென்றான்.

அப் புஸ்தகத்தில், ஒரு வஸ்துவை மற்றொரு வஸ்துவாக மாற்றுவதற்கும் பிறகு பழைய உருவம் அடையச் செய்யவும் பல மந்திரங்கள் எழுதியிருந்தன. அதைப் படித்த அரசகுமாரிக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. தான் ஒரு பெரிய மந்திரவாதி என்று எண்ணினாள். புஸ்தகத்தைக் கையில் எடுத்துக்கொண்டு சாமான் அறைக்குச் சென்றாள். அரிசிப்பானையருகில் சென்று, புஸ்தகத்திலிருந்து சில மந்திரங்களைப் படித்தாள். உடனே ஒவ்வொரு அரிசியும் ஓர் எறும்பாக மாறிற்று. அரிசி மூட்டை முழுவதும் எறும்பு மூட்டையாக மாறவே, அரசகுமாரிக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. அரண்மனையில் உள்ள ஒவ்வொரு மனிதரையும் மிருகமாக மாற்ற ஆரம்பித்தாள். பொல்லாத மந்திரி ஒருவனை அவன் குணத்திற்கு ஏற்றபடி ஒரு நரியாக மாற்றினாள். சோப்பேறி என்ற பெயர் போன வேலைக்காரன் ஒருவனைக் காண்டாமிருகமாக மாற்றினாள். இதுமாதிரியாக ஒவ்வொரு மனிதரையும் வஸ்துவையும் ராஜகுமாரி மாற்ற ஆரம்பித்தாள்.



பிறகு பிரேமாவதி தன் அறைக்கு வந்தாள். சுவரில் அழகாக ஆணி அடித்து மாட்டி வைத்திருக்கும் புலிப் பொம்மையை நிஜப்புலியாக மாற்றினாள். அச்சமயத்தில் மாறின நிஜப் புலி உறுமிற்று. சிம்மாஸனத்தில் வீற்றிருந்த அரசனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. அப்பொழுது அரசனை நோக்கி எறும்புகள் கூட்டம் கூட்டமாக வந்தன. தவிர, காண்டாமிருகம், முயல், எலி முதலியவைகள் அரசன் எதிரில் நடமாடின. அரசனுக்கு ஒன்றும் புரியவில்லை. ராஜகுமாரி பிரேமாவதியின் அறைக்கு ஓடோடிச் சென்றான். அப்பொழுது



காலக்ஷேபம்

விடுதலை இல்லையா?

ஜெயில் அதிகாரி (கைதியை நோக்கி):—உன்னை இன்று முதல் விடுதலை செய்தாயிற்று. இனிமேல் நீ போகலாம்.

விடுதலையான கைதி:—எஜமான், கொஞ்சம் தயவு செய்து என்னை என் பெற்றோர்கள் இருப்பிடத்திற்கு அனுப்பிவிடுங்கள்.

ஜெ-அ:—விலாஸமென்ன?

வி-கை:—வார்ட் நம்பர் எழுபத்தெட்டு, ஸென்டிரல் ஜெயில், திருச்சினாப்பள்ளி.

—எஸ். பி. பாஸ்கரன்.

●

கேட்டுப் பார்த்து விட்டான்!

ராமு:—ஏண்டா கோபு! நேற்று கொள்ளிடம் கோபால்ராவ் புல்லாங்குழல் வாசித்தாரே, கேட்டயாடா? ரொம்ப நன்றாயிருந்ததுடா!

சோமு:—எல்லாம் ரொம்ப நேரம் கேட்டுப் பார்த்துட்டேன்; ஒண்ணும் பிரயோசனமில்லை! 'கொடுக்க மாட்டேன்' என்று சொல்லி விட்டார். வேறே எங்கேயாவதுதான் வாங்கணும்.

—வி. எஸ். கிருஷ்ணசாமி ராவ்.

●

சரியான பதில்

பரிசோதகர் (டிக்கட்டு இல்லாமல் வந்த ஒருவனைப் பிடித்துக்கொண்டு):—உன் பெயர் என்ன?

பட்டிக்காட்டான்:—என் பெயர் சொக்கலிங்கம்.

பரிசோதகர்:—நீ எந்த ஸ்டேஷனிலிருந்து வருகிறாய்?

பட்டிக்காட்டான்:—என்னுங்க, இது தெரியாதுங்களா? ரயில்வே ஸ்டேஷனிலிருந்துதான்.

—டி. எஸ். விசுவநாதன்.

எரிகிறது!

ராமு காலைத் தண்ணீருக்குள் தோய்த்துக்கொண்டு, படித்துக் கொண்டிருக்கிறான்.

கோபு:—ஏண்டா ராமு, காலைத் தண்ணீரில் தோய்த்துக் கொண்டிருக்கிறாய்?

ராமு:—நான் இப்போது சஹாரா பாலைவனத்தைப் பற்றிப் படிக்கிறேன். அதனால் கால்கள் எரிகின்றன.

—கே. ஏ. அண்ணாசாமி.

●

கைமேல் பலன்

தகப்பனார் (நண்பரிடம் பெருமையாக):—பையன்களுக்குப் படிப்பு வருவது நம் கையில் இருக்கிறது. நாம் வீட்டில் சொல்லிக் கொடுத்தால் நிச்சயமாய்க் கைமேல் பலன் இருக்கிறது.

பக்கத்திலிருந்த அவர் மகன்:—ஆமாம், அப்பா! நேற்று நீ சொல்லிக் கொடுத்த வீட்டுக் கணக்குத் தப்பு என்று வாத்தியார் அடித்தது கையை இன்னும் வலித்துக் கொண்டிருக்கிறது!

—வி. எஸ். கே.

●

உரைக்கவில்லை

தாயார்:—ஏண்டா, நான் எத்தனை தரம் சொல்லுகிறேன், சர்க்கரையைத் தின்னாதே, தின்னாதே என்று. உனக்கு உரைக்கவில்லையா!



மகன்:—இல்லவே இல்லையம்மா. நீ ஆயிரம் தடவை சொன்னாலும் உரைக்கவில்லை, தித்திப்பாகத்தான் இருக்கிறது.

—ஷண்முகம்.

பேரில் எவ்வளவு துவேஷம் ஏற்பட்டிருக்கவேண்டும்?"

"அதைப்பற்றி என்ன கவலை, அப்பா! சமண முனிவர்கள், புத்த பிக்ஷுக்கள் எல்லாரும் நமது விரோதிகளுடன் சேரட்டும். திரிநேத்திரதாரியான சிவபெருமான் அருளாலும், சக்கராயுதத்தை ஏந்திய திருமாலின் கிருபையினாலும் நாம் ஜயிப்போம்."

"ஆ! வெற்றி தோல்வியைப்பற்றி நான் அவ்வளவாகக் கவலைப் படவில்லை. என்னுடைய நோக்கத்தை அவர்கள் தப்பாக உணர்ந்திருக்கிறார்களே என்றுதான் வருத்தப்படுகிறேன்" என்று சக்கரவர்த்தி கூறிய போது, அவருடைய குரலில் உண்மையான துயரம் தொனித்தது.

மாமல்லர் சற்று மௌனமாயிருந்துவிட்டு, "ஐந்தாவது கோயிலை எந்தத் தெய்வத்துக்கு அர்ப்பணம் செய்ய எண்ணியிருந்தீர்கள், அப்பா?" என்று கேட்டார்.

"இப்போதைக்கு ஐந்தாவது கோயிலை வெறுமனே விட்டு வைக்க நினைத்திருந்தேன். மேலை நாடுகளில் சில காலமாகப் புதிதாக ஒரு மதம் ஸ்தாபனமாகியிருக்கிறதாம். அதை ஸ்தாபித்த அவதார புருஷரின் பெயர் ஏசு கிறிஸ்து என்று சொல்லுகிறார்கள். அந்தப் புதிய மதத்தைப் பற்றிய விவரங்கள் இன்னும் எனக்குத் தெரிய வரவில்லை. தெரிந்தவுடனே அந்தப் புதிய மதத்தின் தெய்வம் எதுவோ அதை அந்த ஐந்தாவது கோயிலில் எழுந்தருளச் செய்ய எண்ணியிருந்தேன். ஆனால், அதெல்லாம் பகற் கனவாகப் போய்விடும் போலிருக்கிறதே?"

மகேந்திரரின் தீர்க்க திருஷ்டியுள்ள யோசனைகளைக் கேட்டுப் பிரமித்த மாமல்லர், "ஏன் பகற்கனவாகப் போகவேண்டும் அப்பா? யுத்தத்தினால் இந்தச் சிற்பப் பணி ஏன் தடைப்பட வேண்டும்?" என்று கேட்டார்.

"தடைப்படாமலிருக்க வேண்டுமென்பதுதான் என் ஆசை. யுத்தம் முடிவதற்குள்ளே இந்த ஐந்து கோயில்களும் பூர்த்தியாக வேண்டுமென்று விரும்புகிறேன். அதற்காகத்தான் ஆயனரை இன்றைக்கு இங்கே வரச் சொல்லியிருக்கிறேன்."

"ஆயனர் வந்தால் முடிந்துவிடுமா, அப்பா?"

"அவர் மனது வைத்தால் முடியும். ஆயனர்தான் இந்த மகத்தான சிற்பப் பணியை ஆரம்பித்து வைத்தார். அவர் நடுக்காட்டில் போய் உட்கார்ந்திருப்பதால் வேலை வெகு நிதானமாக நடக்கிறது. அவரை இங்கேயே தங்கி வேலையைத் துரிதமாக முடிக்கும்படி சொல்லப் போகிறேன் ...... அதோ, ஆயனரும் வந்து விட்டார்!"

நரசிம்மர் சட்டென்று ஆவலுடன் திரும்பிப் பார்த்தார். அவருடைய ஆவல் பூர்த்தியாயிற்று. சற்றுத் தூரத்தில் வந்துகொண்டிருந்த சிவிகையில் ஒரு பக்கத்தில் ஆயனர் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். மற்றொரு பக்கம், பட்டப் பகலில் பூரண சந்திரன் பிரகாசிப்பதுபோல் ஒரு காட்சி தென்பட்டது. அந்தப் பூரண சந்திரன் சிவகாமியின் வதன சந்திரன்தான் என்று சொல்லவும் வேண்டுமோ?



காரியம் செய்யப் போகிறேன். இந்தத் தமிழகத்தில் பரவியுள்ள நாலு பெரிய சமயங்களுக்கும் நாலு கோயில்களை அர்ப்பணம் செய்யப் போகிறேன். ஒரு கோயிலில் சிவபெருமானும் பார்வதி தேவியும் வீற்றிருப்பார்கள். இரண்டாவது கோயிலில் திருமாலும் திருமகளும் குடிகொள்ளுவார்கள். மூன்றாவது கோயிலைப் புத்தர் பெருமானின் பெரிய விக்கிரகம் அலங்கரிக்கும். நாலாவது கோயிலில் வர்த்தமான மகா வீரர் எழுந்தருளுவார்......!"

"ஆஹா!" என்று பெருவியப்புடனும் பெருமிதத்துடனும் மாமல்லர் கூவினார்.

"ஆம், நரசிம்மா! உண்மையில் நான் சமண சமயத்திலிருந்து விலகிச் சைவத்தைத் தழுவியதே நமது ராஜ்யத்தில் இத்தகைய சமய சமரசத்தை நிலை நாட்டுவதற்காகத்தான். சைவ சமயமானது மற்ற சமயங்களையும் உயர்வாகக் கருதிப் போற்றுவதற்கு இடந் தருகிறது. மற்றச் சமயங்களோ அவ்விதம் இடங் கொடுப்பதில்லை. இதை முன்னிட்டே சைவ சமயத்தை மேற்கொண்டேன். நமது சாம்ராஜ்யத்திலுள்ள நாலு பெரிய சமயங்களுக்கும் சமமான கௌரவம் கொடுத்துப் போற்ற எண்ணினேன். இதை வெளியிடுவதற்கு, என் மேல் புத்தர்களும் சமணர்களும் கொண்டுள்ள கோபம் தணியும் காலத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்தேன். அதற்குள்ளே சமண முனிவர்கள் அவசரப்பட்டு எல்லாக் காரியத்தையும் கெடுத்து விட்டார்கள்......"

"சமண முனிவர்கள் கெடுத்து விட்டார்களா? எப்படியப்பா?......"

"ஆமாம்; அவர்கள் செய்த காரியந்தான் இந்த யுத்தம். ஜீன காஞ்சியிலிருந்து நாலா புறங்களுக்கும் புறப்பட்டுச் சென்ற ஜைன முனிவர்கள் சும்மா இருந்து விடவில்லை. நமது நெடுநாளைய சிநேகிதர்களைக் கூட நம் விரோதிகளாக்கிவிட்டார்கள். இந்தக் கங்கை பாடி துர்விநீதனுடைய தந்தைக்கு முடிசூட்டியது யார் தெரியுமா? உன்னுடைய பாட்டனார் சிம்ம விஷ்ணு மகாராஜாதான். அந்தத் துர்விநீதன் இப்போது நமது பரம்பரை விரோதியான சளுக்க மன்னனுடன் சேர்ந்து கொண்டிருக்கிறான். கேள் விக்கிரமா! புலிகேசியின் படை வீட்டில் ஜைன மகாகவி ரவி கீர்த்தியும், துர்விநீதனுடைய குரு பூஜ்யபாதரும் இருக்கிறார்களாம். சைன்யத்துடன் சேர்ந்து அவர்களும் வந்து கொண்டிருக்கிறார்களாம். உலகப் பற்றற்ற முனிவர்கள், அதிலும் கொல்லாமை விரதங்கொண்ட சமண குருக்கள், போர்க்களத்துக்கு வருவது என்றால், ஆஹா! அவர்களுக்கு என்



என்று அவர் வாயிலிருந்து புறப்பட்ட வியப்பொலியில் விவரிக்க முடியாத பல உணர்ச்சிகள் தொனித்தன.

சற்று நேரம் மகேந்திரர் சிந்தனையில் ஆழ்ந்து வெளி உலகப் பிரக்ஞையே யில்லாதவராய் நின்றார். பிறகு, நரசிம்மனைத் தழுவிக்கொண்டு, "குழந்தாய்! எப்பேர்ப்பட்ட அதிசயமான உண்மையை நீ கண்டுபிடித்துக் கூறினாய்? நீ கூறிய வார்த்தையின் மகிமை முழுதும் உனக்கே தெரிந்திராது" என்றார்.

பன்னிரண்டு பிராயத்துச் சிறுவனை நரசிம்மன் மேலும் உற்சாகத்துடன், "அப்பா! அதோ, அந்தக் குன்றின் நிழலைப் பாருங்கள்! கோயில் மாதிரி இல்லையா?" என்றான்.

"ஆமாம், நரசிம்மா! ஆமாம்! அந்தக் குன்றின் நிழல் கோயில் மாதிரிதான் இருக்கிறது. அதைக் கோயிலாகவே செய்து விடுவோம். இந்த ஐந்து குன்றுகளையும் ஐந்து கோயில்களாக்குவோம். இன்னும் இங்குள்ள சிறு பாறைகளை யானையாகவும், சிங்கமாகவும், நந்தியாகவும் ஆக்குவோம். குழந்தாய்! இன்றைக்கு நீ சொன்ன வார்த்தையினால், பல்லவ குலத்தின் புகழ் இந்த உலகம் உள்ளளவும் நிலைத்திருக்கும் வழியைக் காட்டினாய். இந்தத் துறைமுகத்தைச் சொப்பன லோகமாக ஆக்குவோம். ஆயிரம் ஆயிரம் வருஷங்களுக்குப் பிறகு இந்தத் துறைமுகத்துக்கு வருகிறவர்கள் எல்லாரும் பார்த்துப் பிரமிக்கும்படியாகச் செய்வோம்!" என்றார்.

அதற்கு மறுநாளே அந்த இடத்துக்குச் சிற்பிகள் பலர் சிற்றுளிகளுடன் வந்து சேர்ந்தார்கள். குன்றுகளிலும் பாறைகளிலும் வேலை செய்யத் தொடங்கினார்கள். நேற்று வரை அமைதி குடிகொண்டிருந்த இடத்தில் நூற்றுக் கணக்கான சிற்றுளிகளின் சத்தம் 'கல் கல்' என்று கேட்க ஆரம்பித்தது.

புதர்களில் வாழ்ந்திருந்த முயல்கள் திடீரென்று எழுந்த 'கல் கல்' சத்தத்தைக் கேட்டு வெளியே வந்தன. காதுகளைத் தூக்கிக் கொண்டு ஒரு நிமிஷம் வியப்புடன் கவனித்தன. பின்னர் அங்கிருந்து ஓட்டம் பிடித்தன.

அன்று தொடங்கிய சிற்பப் பணி இன்றும் அங்கே நடந்து கொண்டிருந்தது. அதே இடத்தில் இப்போது யானையாகவும் சிங்கமாகவும் ரிஷபமாகவும் உருவெடுத்த பாறைகளுக்கு அருகில் இன்று சக்கரவர்த்தியும் மாமல்லரும் நின்றார்கள்.

"நரசிம்மா! இந்த யுத்தம் இப்போது வந்ததில் எனக்குப் பலவகையில் சந்தோஷந்தான். ஆனால், இந்தக் கற் கோயில்களின் வேலை ஒரு வேளை தடைப்பட்டு விடுமோ, என் காலத்தில் இந்தத் திருப்பணி பூர்த்தியாகாதோ என்று மட்டும் சிறிது கவலையாய்த்தான் இருக்கிறது. குழந்தாய்! இந்த ஐந்து கோயில்களையும் நிர்மாணித்து, எந்தத் தெய்வங்களை அவற்றில் பிரதிஷ்டை செய்ய உத்தேசித்திருந்தேன் என்று உனக்குச் சொன்னேனா?" என்று கேட்டார்.

"இல்லை, அப்பா, சொல்லவில்லை!"

"வடக்கே கன்யாகுப்ஜத்தில் ஹர்ஷவர்த்தனர் வருஷந்தோறும் நடத்தும் உற்சவத்தைப் பற்றித் தெரியுமல்லவா, நரசிம்மா?"

"தெரியும் அப்பா! சிவபெருமானுக்கும், சூரியநாராயண மூர்த்திக்கும், புத்தர் பெருமானுக்கும் அவர் மூன்று கோயில்கள் எடுத்திருக்கிறார்; அந்த மூன்று கோயில்களிலும் வருஷந்தோறும் உற்சவம் நடத்துகிறார்; மூன்று மதத்தைச் சேர்ந்த பிரஜைகளும் வந்து ஒரே சமயத்தில் உற்சவம் கொண்டாடுகிறார்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன்."

"நரசிம்மா! ஹர்ஷவர்த்தனர் இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தைக் காட்டிலும் எவ்வளவோ பெரிய சாம்ராஜ்யத்தை ஆளுகிறார். அவருடைய செல்வமோ நம்முடையதைவிடப் பன்மடங்கு அதிகமானது. அவருடைய புகழ் இன்றைக்கு உலகமெல்லாம் பரவியிருக்கிறது. ஆனால், குழந்தாய்! என்னுடைய உத்தேசம் மட்டும் நிறைவேறுமானால், ஹர்ஷர் மட்டுமல்ல, இந்தப் பாரத வர்ஷத்தில் இதுவரையில் எந்த அரசரும் சக்கரவர்த்தியும் அடையாத கீர்த்தியை நானும் நீயும் அடைவோம். ஹர்ஷர் நிர்மாணித்திருக்கும் கோயில்கள் செங்கல்லினாலும் மரத்தினாலும் ஆனவை. நூறு இரு

நூறு வருஷத்தில் அவை மக்கி இடிந்து மறைந்து போய்விடும். ஆனால், குன்றுகளைக் குடைந் தெடுக்கும் இந்தக் கற் கோயில்களுக்கு அழிவென் பதே கிடையாதல்லவா......?"

"இக் கோயில்களில் எந்தத் தெய்வங்களை எழுந்தருளச் செய்யப் போகிறீர்கள், அப்பா! சிவபெருமான், பார்வதி தேவி, விநாயகர், சுப்பிர மணியர், சண்டிகேசுவரர் ஆகிய பஞ்ச மூர்த்திகளுக்குந்தான் இந்த ஐந்து கோயில்களும் என்று எண்ணினேன்."

"இல்லை, நரசிம்மா!"

"ஒரு வேளை பஞ்ச பாண்டவர்களை இந்த ஐந்து கோயில்களிலும் பிர திஷ்டை செய்யப் போகிறீர்களா?"

சமீப காலத்தில் மகேந்திர சக்கர வர்த்தி எல்லாக் கோயில்களிலும் மகா பாரதம் படிப்பதற்கு ஏற்பாடு செய்து, அதற்காக மண்டபம் கட்டி மானியமும் விட்டிருந்தார். இக் கார ணத்தினால் அவர் பஞ்ச பாண்டவர் களுக்கே கோயில் கட்டுகிறாரோ என்று நரசிம்மர் எண்ண நேர்ந்தது.

"அதுவும் இல்லை. ஹர்ஷ வர்த்தன ரைக் காட்டிலும் அதிகமாக ஒரு



மகேந்திர பல்லவர் அங்கே பல அரசாங்க அதிகாரிகளையும், சிற்பிகளையும் குடியேற்றினார். அரச குடும்பத்தினர் தங்குவதற்கு அழகிய கடற்கரை அரண்மனையைக் கட்டி வைத்தார். அங்கே சிற்ப வேலை தொடங்குவதற்குக் காரணமாயிருந்த தமது செல்வப் புதல்வரின் பட்டப் பெயரையும் அப்புதிய பட்டினத்துக்கு அளித்தார்.

அவ்விதம் அத் துறைமுகப் பட்டினத்துக்கு மாமல்லபுரம் என்னும் பெயர் இட வேண்டுமென்று முதன் முதலில் சக்கரவர்த்திக்குத் தோன்றிய அதே இடத்தில், சென்ற அத்தியாயங்களில் கூறிய சம்பவங்கள் நடந்த தினத்துக்கு மறுநாள் பிற்பகலில், சக்கரவர்த்தியும் மாமல்லரும் நின்று கொண்டிருந்தார்கள்.

இருபத்தாறும் அத்தியாயம்

கற்கோயில்கள்

கடல் மல்லைத் தீவின் தென் பகுதியில் வரிசையாக ஐந்து சிறு குன்றுகள் நின்றன.

அவற்றில் மூன்று குன்றுகளில் நூற்றுக்கணக்கான சிற்பிகள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு குன்றையும் குடைந்து கோயில் வடிவமாக அமைத்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு கோயிலில் முன் மண்டபத்துத் தூண்கள் வேலையாகிக் கொண்டிருந்தன. இன்னொரு கோயிலில் மேல் விமான வேலை நடந்து கொண்டிருந்தது. மூன்றாவது குன்றை அப்போதுதான் குடைய ஆரம்பித்திருந்தார்கள்.

சிற்பிகளும் பணியாட்களும் தங்குவதற்கான சிறு கொட்டகைகள் நெடுகிலும் காணப்பட்டன.

ஆயனர் வீட்டைச் சுற்றி நாம் பார்த்தது போன்ற நெடிதுயர்ந்த மரங்களோ, அடர்ந்த செடி கொடிகளோ அந்தப் பிரதேசத்தில் காணப்படவில்லை. வடக்கே வெகு தூரம் மணற்பாங்காயிருந்தது. அதற்கப்பால் கடல் அலைகள் வெண்ணுரையுடன் அவ்வப்போது மேலெழும் காட்சி தோன்றியது. தெற்கிலும், மேற்கிலும் சிறு சிறு பாறைகளும், அவற்றைவிடக் குட்டையான புதர்களும் வெகு தூரத்துக்குக் காணப்பட்டன.

ஆனால், வடக்கேயும் வட மேற்கேயும் பார்த்தால் முற்றும் மாறான காட்சி தென்பட்டது. வானளாவிய பெரிய கட்டிடங்களும், அவற்றின் இடையிடையே நெடிய தென்னை மரங்களும் காட்சியளித்தன. இன்னும் அப்பால் நூற்றுக்கணக்கான கப்பல் பாய்மரங்களின் உச்சிகளில் வரிசை வரிசையாகக் கொடிகள் காற்றிலே அசைந்தாடிக் கொண்டிருந்தன.

* * *

சிற்ப வேலை நடந்து கொண்டிருந்த குன்றுகளுக்கு மத்தியில் ஒரு கல் யானை கம்பீரமாக நின்றது. அதன் பின்னால் அலங்கரிக்கப்பட்ட ஒரு நிஜ யானை — பல்லவ சாம்ராஜ்யத்தின் பட்டத்து யானை — நின்றது.

யானைமீது வந்த சக்கரவர்த்தியும் அவருடைய குமாரரும் கீழிறங்கிக் கல் யானையின் அருகில் நின்றார்கள். அவர்கள் மீது வெயில் படாமல் ஒரு விசாலமான வெண் கொற்றக் குடையை இரு பணியாட்கள் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

* * *

இதே இடத்தில் ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் மகேந்திர சக்கரவர்த்தியும் அவருடைய குமாரரும் வந்து இதே விதமாக நின்றதுண்டு. ஆனால், அப்போது அங்கு நின்ற குன்றுகளும் பாறைகளும் மொட்டைக் குன்றுகளாவும் மொட்டைப் பாறைகளாகவும் இருந்தன.

"அப்பா! அந்தப் பாறையின் நிழலைப் பாருங்கள்! அது யானையைப் போல் இல்லையா?" என்றான் பல்லவ குலந் தழைக்கவந்த நரசிம்மன்.

அவன் சுட்டிக் காட்டிய நிழலைச் சக்கரவர்த்தி பார்த்தார். "ஆஹா!"

பிரயாணம் செய்வதற்காகச் சென்றவன், மணி பல்லவம் என்னும் தீவையடைந்து அந்நாட்டு அரசன் மகள் பீலிவளையைக் காதலித்து மணந்து கொண்டான். அவர்களுக்கு ஒரு குழந்தையும் பிறந்தது. அந்த அரசிளங் குமாரன் தன் மனைவியோடும் குழந்தையோடும் தாய் நாட்டுக்குத் திரும்பி வந்தபோது மேற்படி கடல் விபத்து நேர்ந்தது. விபத்தில் தப்பிப் பிழைத்து வந்த குழந்தைதான் பல்லவ குலத்தைத் தோற்றுவித்த தொண்டைமான் இளந்திரையன்!" என்று கற்பனை செய்து கூறுகிறார்கள்.

இதைக் கேட்ட வட நாட்டுப் புலவர்கள், "கிடையவே கிடையாது! பாண்டவர்களின் குருவாகிய துரோணருடைய புதல்வர் அசுவத்தாமாவின் வழி வந்தவர்கள் பல்லவர்கள்!" என்று கூறி, அதற்கும் ஒரு கதை சிருஷ்டிக்கிறார்கள். *

* * *

பல்லவ குலத்தின் உற்பத்தியைப் பற்றிய மேற்கூறிய வரலாறுகளில் எவ்வளவு வரையில் உண்மை உண்டு, எவ்வளவு தூரம் கற்பனை என்பதை இந்நாளில் நாம் நிச்சயித்துச் சொல்வதற்கில்லை. அந்நாளில் அக்குலத்திலே தோன்றிப் புகழுடன் செங்கோல் செலுத்திய பல்லவ மன்னர்களுக்கும் அதன் உண்மை தெரிந்திருக்கவில்லை.

ஆனால், ஒன்று நிச்சயமாகத் தெரிந்திருந்தது. அதாவது பல்லவ குலத்தில் தோன்றியவர்களுக் கெல்லாம் கடற் பிரயாணத்தில் ஆசை அபரிமிதமாயிருந்தது. அந்த ஆசை அவர்களுடைய இரத்தத்தோடு கலந்து உயிரோடு ஒன்றிப் போயிருந்தது.

பல்லவ வம்சத்து இராஜ குமாரன் ஒவ்வொருவனும் ஒரு தடவையாவது கடற் பிரயாணம் செய்து வரவேண்டுமென்ற நியதி இருந்துவந்தது.

கீழ்த் திசையில் கடல்களுக் கப்பாலிருந்த எத்தனையோ தீப தீபாந்தரங்களில், பல்லவர்களின் ஆதிநாள் ரிஷபக் கொடியும், பிற் காலத்துச் சிங்கக் கொடியும் கம்பீரமாகப் பறந்தன.

அந்நாளில் தமிழகத்துக்கும் வெளி நாடுகளுக்கும் கடல் வாணிகம் அபரிமிதமாக நடந்து வந்தது.

கப்பல்கள் வந்து நிற்பதற்கும், பண்டங்களை இறக்கி ஏற்றிக் கொள்வதற்கும் கீழ்க் கடற்கரையோரமாகப் பல துறைமுகங்கள் ஏற்பட்டிருந்தன. அவற்றுள் எல்லாம் முதன்மையானது மாமல்லபுரத்துத் துறைமுகமாகும்.

மாமல்ல புரத்துக்கு வடபுறத்தில் கடலானது பூமிக்குள் புகுந்து தென் திசையை நோக்கி வளைந்து சென்று மாமல்ல புரத்தை ஏறக்குறைய ஒரு தீவாகச் செய்திருந்தது.

இவ்விதம் கடல் பூமிக்குள் சென்றிருந்தபடியால் ஏற்பட்டிருந்த இயற்கைத் துறைமுகமானது ஏககாலத்தில் நூற்றுக்கணக்கான கப்பல்கள் வந்து நிற்பதற்கும், பண்டங்களை ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் வெகு வசதியாக அமைந்திருந்தது.

மகேந்திரர் காலத்துக்கு முந்தி அத் துறைமுகத் தீவுக்குத் தனிப் பெயர் கிடையாது. அதில் அதிக ஜனவாசமும் கிடையாது. பெரும்பாலும் வர்த்தகர்களின் பண்டக சாலைகளும், சுங்க மண்டபங்களும், படகோட்டிகள்—மீன் பிடிக்கும் வலைஞர்களின் குடிசைகளுமே அங்கு இருந்தன.

---

* கடைசியாக, சமீப காலத்தில், இந்தியச் சரித்திர ஆராய்ச்சியில் ஈடுபட்ட ஐரோப்பியப் புலவர்கள், பல்லவர்களைத் தந்த பெருமையைத் தென்னிந்தியாவுக்கோ வட இந்தியாவுக்கோ தருவதற்கு விருப்பமில்லாதவர்களாய், இந்தியாவுக்கு வட மேற்கிலிருந்து வந்த அன்னியர்களாகிய சகர்தான் காஞ்சிபுரத்தைத் தேடி வந்து பல்லவர்கள் ஆனார்கள் என்று எழுதி, அதைப் புத்தகங்களிலும் அச்சுப் போட்டார்கள்! நமது பழம் புலவர்களின் கதைகளை யெல்லாம் கற்பனை யென்று தள்ளிய நம்மவர்களோ, மேற்படி நவீன ஐரோப்பியப் புலவர்களின் வாக்கை வேத வாக்காக ஒப்புக்கொண்டு "பல்லவர்கள் அன்னியர்களே" என்று சத்தியம் செய்தார்கள். தமிழகத்துக்குப் பலவகையிலும் பெருமை தந்த காஞ்சிப் பல்லவர்களை அன்னியர்கள் என்று சொல்வதைப் போன்ற மௌடீகப் பொய்க் கதை உலக சரித்திரத்திலேயே இதுவரையில் சிருஷ்டிக்கப்பட்டதில்லை,

இல்லை; சின்னஞ்சிறு குழந்தை அது! பலகையிலே சேர்த்துப் பீதாம்பரத்தினால் கட்டப்பட்டிருக்கிறது. அதன் முகத்திலே அவ்வளவு பிரகாசம்; அவ்வளவு தேஜஸ்!

ஐயோ! குழந்தைக்கு உயிர் இருக்கிறதா? ஒருவேளை ......? ஆகா! இருக்கிறது; உயிர் இருக்கிறது! இப்போது அமைதி யடைந்துள்ள கடலில் இலேசாகக் கிளம்பி விழும் இளம் அலைகளின் நீர்த்துளிகள் குழந்தையின் முகத்தில் விழும்போது, அது 'களுக்' என்று சிரிக்கிறது!

படகோட்டி அளவுக் கடங்காத ஆர்வத்துடன் அந்தப் பலகையின் அருகில் படகைச் செலுத்துகிறான். குனிந்து குழந்தையைத் தாவி எடுத்துக் கட்டை அவிழ்த்து மார்போடு அணைத்து மகிழ்கிறான். அவனுடைய மார்பின் ரோமங்கள் குத்திய காரணத்தினால் குழந்தை அழுகிறது!

உடனே படகோட்டி, படகிற்குள்ளே பார்க்கிறான். அங்கே, கப்பலிலிருந்து இறக்கும் பண்டங்களைக் கட்டுவதற்காக அவன் அன்று காலையில் கொண்டு வந்து போட்டிருந்த தொண்டைக் கொடிகள் கிடக்கின்றன.

அக்கொடிகளை இலைகளோடு ஒன்று சேர்த்துக் குவித்துப் படுக்கையாக அமைக்கிறான். கொடிகளின் நுனியிலிருந்த இளந் தளிர்களைப் பிய்த்து எடுத்து மேலே தூவுகிறான். அந்த இளந்தளிர்களின் மீது குழந்தையைக் கிடத்துகிறான்.

குழந்தை இப்போது படகோட்டியைப் பார்த்துக் குறுநகை புரிகிறது!

படகு கரையை நோக்கி விரைந்து செல்லுகிறது.

கரையை நெருங்கும்போதே படகோட்டி கூச்சலிட்டுக் குதூகலிக்கிறான். ஏதோ விசேஷம் என்று அறிந்து கரையிலே பெரும் ஜனக் கூட்டம் கூடுகிறது.

படகு கரையை அடைகிறது; ஜனங்கள் வந்து படகைச் சூழ்கிறார்கள்.

தீர்க்க தரிசனம் கூறிய மகானும் வருகிறார். வந்து, குழந்தையைப் பார்க்கிறார்! "ஆ! இவன்தான்! நான் கனவிலே கண்ட புதிய காஞ்சி மன்னன் இவன்தான்! இவனுடைய சந்ததியார் காஞ்சி சிம்மாசனத்தில் வீற்றிருந்து ஆயிரம் ஆண்டு அரசாளப் போகின்றனர்!" என்று கூறுகிறார்.

ஜனங்கள் ஆஹாகாரம் செய்து ஆரவாரிக்கிறார்கள்.

திரை கடல் அளித்த தெய்வக் குழந்தைக்கு அப் பெரியவர், "இளந்திரையன்" என்று பெயர் இடுகிறார். தொண்டைக் கொடியின் மீது கண் வளர்ந்த டிடியால், "தொண்டைமான் என்ற பெயரும் பொருந்தும்" என்கிறார் இன்னொரு பெரியவர். "இவனால் இனி இந்தக் காஞ்சி ராஜ்யத்துக்குத் தொண்டை மண்டலம் என்ற பெயர் வழங்கும்" என்னும் தீர்க்க தரிசனமும் அவர் அருள் வாக்கிலிருந்து வெளி வருகிறது.

வடமொழிப் புலவர் ஒருவர் வருகிறார். இளந்தளிர்களின் மீது கிடக்கும் குழந்தையைப் பார்த்து விட்டு, அதற்குப் "பல்லவ ராயன்" என்று நாமகரணம் செய்கிறார்.

தமிழ்ப் புலவர் அதை, "போத்தரையன்" என்று மொழி பெயர்த்துக் கூறுகிறார்.

கவிகள் வருகிறார்கள். கடல் தந்த குழந்தையைப் பற்றி அழகான கற்பனைகளுடன் கவிதைகள் புனைகிறார்கள்.

"இந்தத் திரைகடல் ஏன் இப்படி ஆர்ப்பரிக்கிறது, தெரியுமா? 'திரையனை நான் பயந்தேன்' என்ற பெருமிதத்தினாலேதான்!" என்று ஒரு தமிழ்க் கவி கூறியபோது, ஆர்கலியானது தன் அலைக்கைகள் ஆயிரத்தையும் கொட்டி ஆரவாரத்துடன் ஆமோதிக்கிறது!

* * *

பிற் காலத்தில் தோன்றிய கவிகளுக்குப் பல்லவ குலத்தைக் கடல் தந்ததாகக் கூறி விட்டுவிட மனம் வரவில்லை. "ஆகா! கடல் தந்த அந்தக் குழந்தை யார் தெரியுமா? தமிழகத்தின் அநாதியான சோழ வம்சத்துக் குழந்தைதான்! சோழகுலத்து இராஜ குமாரன் ஒருவன், கடற்



இருபத்தைந்தாம் அத்தியாயம்

கடல் தந்த குழந்தை

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் காஞ்சி ராஜ்யத்தின் புராதன ராஜ வம்சம் சந்ததியில்லாமல் முடிவடைந்தது.

"மன்னன் இல்லாத மண்டலம் பாழாய்ப் போய் விடுமே! அரசன் இல்லாத நாட்டில் குடிகள் எல்லையற்ற துன்பங்களுக்கு உள்ளாவார்களே!" என்று தேசத்தின் பெரியோர்கள் ஏங்கினார்கள்.

அப்போது அருளாளரான ஒரு மகான் மக்களைப் பார்த்து, "கவலை வேண்டாம்; காஞ்சி ராஜ்யத்துக்கு ஒரு மன்னனைக் கடல் கொடுக்கும்! இதை நான் கனவிலே கண்டேன்!" என்றார்.

அது முதல் அந் நாட்டின் கடற்கரையோரத்தில் காவல் போட்டு வைத்திருந்தார்கள்.

ஒரு நாள் கடற்கரை யோரமாகக் கப்பல் ஒன்று வந்தது. அது எந்த நாட்டுக் கப்பலோ, எங்கிருந்து வந்ததோ, தெரியாது.

கரையிலிருந்தவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே திடீரென்று கொடிய புயற்காற்று வீசுகிறது. ஊழிக் காலம் வந்து விட்டதோ என்று தோன்றும்படி கடல் கொந்தளிக்கிறது. கரையோரமாக வந்த கப்பல் அப்படியும் இப்படியுமாய் ஆடுகிறது! அதன் கொடி மரங்கள் சின்னாபின்னமாகின்றன!

ஆ! என்ன பயங்கரம்! கப்பல் தயிர் கடையும் மத்தைப் போல் சுழலுகிறதே! சுழன்று சுழன்று அதோ கவிழ்ந்து விட்டதே! புயற் காற்றின் கோரமான ஊளைச் சத்தத்துடன், கப்பலிலுள்ளோரின் அழு குரலும் கலக்கின்றதே!

கப்பல் கவிழ்ந்து கடலுக்குள் முழுகிற்றோ, இல்லையோ, சொல்லி வைத்தாற்போல், காற்றும் நிற்கிறது. அது வரை கரையிலே நின்று செயலற்றுப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் இப்போது பரபரப்பு அடைகிறார்கள். படகுகளும் கட்டு மரங்களும் கடலில் விரைவாகத் தள்ளப் படுகின்றன. கப்பலில் இருந்தவர்களில் தெய்வாதீனமாக யாராவது உயிருடன் கடலில் மிதந்தால், அவர்களைக் காப்பாற்றிக் கரை சேர்ப்பதற்காகப் படகுகளும் கட்டு மரங்களும் விரைந்து செல்லுகின்றன. படகோட்டிகளும் மீன் பிடிக்கும் வலைஞர்களும் பாய்ந்து செல்லுகிறார்கள்.

அத்தனை படகோட்டிகளிலும், வலைஞர்களிலும் அதிர்ஷ்டசாலி ஒருவன் தான் இருக்கிறான். அதிர்ஷ்டம் அவனைத் தேடிக்கொண்டு வருகிறது. அவனுக்கு மட்டும் வந்த அதிர்ஷ்டமல்ல; நாட்டுக்கே வந்த அதிர்ஷ்டம்! நாட்டு மக்கள் செய்த நல்வினையினால் வந்த அதிர்ஷ்டம்!

நீலக் கடலின் அலைமேல் சூரியன் மிதக்கிறானா, என்ன?—இல்லை, சூரியன்

பூர்வ கதை

சுமார் ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் காஞ்சிமா நகரில் தர்ம மகா ராஜாதி ராஜ மகேந்திர பல்லவ சக்ரவர்த்தி செங்கோல் செலுத்தி வந்தார். அவருடைய சாம்ராஜ்யம் தெற்கே பாண்டிய நாட்டு எல்லையிலிருந்து வடக்கே கோதாவரி நதிக்கரை வரையில் பரவியிருந்தது.

அக்காலத்தில் பாரத நாட்டிற்குள்ளே ஒப்பற்ற பெருமையுடன் விளங்கிய காஞ்சிமா நகரில் சம்ஸ்கிருத கடிகைகளும், சைவத் தமிழ் மடங்களும், பௌத்த வித்யாஸ்தானங்களும், ஜைனப் பள்ளிகளும் பெயர் பெற்றிருந்தன.

சோழ நாட்டிலுள்ள திருச்செங்காட்டாங்குடி என்னும் கிராமத்திலிருந்து பரஞ்சோதி என்னும் இளைஞன் காஞ்சியில் திருநாவுக்கரசர் மடத்தில் சேர்ந்து தமிழ்க் கல்வி கற்பதற்காக வந்தான். வழியிலே சந்தித்த நாகநந்தி என்னும் புத்த சந்யாசியுடன் அவன் ஒரு நாள் இருட்டிய பின்னர் காஞ்சிக்கோட்டைக்குள் பிரவேசித்தான். அதே தினத்தில், சளுக்க மன்னனாகிய புலிகேசி பல்லவ சாம்ராஜ்யத்தின் மேல் படையெடுத்திருக்கும் செய்தி வந்ததின் காரணமாக, ஆயனச் சிற்பியின் பெண் சிவகாமியின் நடன அரங்கேற்றம் நடுவில் தடைப்பட்டது என்று ஜனங்கள் பேசிக் கொள்வது பரஞ்சோதியின் காதில் விழுகிறது.

ஆயனரும் சிவகாமியும் சிவிகையில் ஏறி வருகிறார்கள். அச்சமயம் மதம் பிடித்த யானை ஒன்று நெறிகெட்டு ஓடிவருகிறது. பரஞ்சோதி தான் கொண்டுவந்திருந்த வேலை மத யானையின் மீது எறிந்து அது தன்னை நோக்கித் திரும்பியதும் விரைந்தோடுகிறான். வெகு நேரம் இரவில் காஞ்சி நகர் வீதிகளில் அலைந்த பிறகு ஊர்க் காவலர்கள் அவனைச் சிறையில் அடைக்கிறார்கள். அன்றிரவே நாகநந்தி அவனைச் சிறையிலிருந்து தப்புவித்து இராஜ விஹாரம் என்னும் புத்தர் கோவிலில் உள்ள இரகசிய வழியின் மூலம் அவனைக் கோட்டைக்கு வெளியே அழைத்துச் செல்கிறார்.

திருநாவுக்கரசருக்கும் ஆயனருக்கும் பரஞ்சோதி ஓலை கொண்டு வந்திருந்தான். திருநாவுக்கரசர் காஞ்சியில் இல்லை என்று அறிந்து, அவன் புத்த பிக்ஷுவுடன் ஆயனர் வீடு செல்கிறான்.

ஆயிரம் வருஷம் ஆனாலும் அழியாத அஜந்தா வர்ணச் சேர்க்கை இரகசியத்தை அறிந்து வருவதற்காகப் பரஞ்சோதியைக் கிருஷ்ணா நதிக்கரையிலுள்ள ஸ்ரீபர்வதம் என்னும் நாகார்ஜுன மலைக்கு அனுப்பலாமென்று நாகநந்தி சொல்கிறார். அச்சமயத்தில் மகேந்திர சக்ரவர்த்தியும், அவருடைய புதல்வர் மாமல்ல நரசிம்மரும் ஆயனர் வீட்டுக்கு வரவே, பிக்ஷுவும் பரஞ்சோதியும் புத்தர் சிலைக்குப் பின்னால் ஒளிந்து கொள்கிறார்கள்.

அதற்குச் சற்று முன்னால் ஆயனர் வீட்டுக்கு அருகிலுள்ள தாமரைக்குளக்கரையில் சிவகாமியும் குமாரசக்ரவர்த்தி மாமல்லரும் சந்திக்கிறார்கள். சிவகாமியின் ஊடல் தீர்ந்த பின், அவள் நரசிம்மரிடம் வேலின் மேல் ஆணையாகத் தன்னை மறப்பதில்லை என்று வாக்குறுதி கேட்கிறாள். அப்போது பரஞ்சோதி ஆயனர் வீட்டிலிருப்பது மாமல்லருக்குத் தெரிகிறது. அந்த வீரனைக் கண்டு அவனுடைய வேலைத் திருப்பிக் கொடுக்க நரசிம்மர் விரைந்து செல்கிறார். ஆயனர் வீட்டில் அவனைக் காணாமல் ஏமாற்றமடைகிறார்.

ஆனால், புத்தர் சிலைக்குப் பின்னால் அவனும் பிக்ஷுவும் ஒளிந்திருப்பதைச் சக்ரவர்த்தி கண்டு கொண்டு வெளியில் வந்த பின் சத்ருக்னன் என்னும் ஒற்றனை வேவு பார்க்க ஏவுகிறார். பின்னர், கால்வாய்ப் படகில் மாமல்லபுரத்துக்குப் போகும்போது, நரசிம்மரிடம் தாம் போர்க்களத்திலிருந்து திரும்பும் வரை காஞ்சிக் கோட்டைக்கு வெளியே போவதில்லை என்று வாக்குறுதி பெறுகிறார்.

பரதன். பக்கத்திலுள்ளவர்கள் கொஞ்சம் தேற்றினார்கள். தேறுதல் அவ்வளவு எளிதில் வந்துவிடவா செய்யும்? ஏதோ எல்லோராலும் கைவிடப்பட்டவனாகத் தன்னை எண்ணுகிறான் அவன். ஆனாலும் ஆறுதலுக்கான ஒரு எண்ணம் உதிக்கிறது.

'எந்தையும் ஆயும்எம்
பிரானும் எம்முனும்

அந்தமில் பெருங்குணத்(து)
இராமன் ஆதலால்,—

வந்தனை அவன்கழல்
வைத்த போதலால்

சிந்தைவெங் கொடுந்துயர்
தீர்க வா(து)' என்றான்.

[எந்தையும் ஆயும் எம்பிரானும் எம்முனும்: தந்தை தாய், கடவுள், அண்ணன் எல்லாமாய் இருக்கிறான் ராமன் எனக்கு; அந்தமில்: எவ்வளவு பாராட்டினாலும் முடிவடையாத; வந்தனை அவன் கழல் வைத்த போதலால்: என் நமஸ்காரத்தை ராமன் பாதத்தில் செலுத்திய போதல்லால்.]

ராமனிடத்தி லுள்ள அன்பும் மரியாதையும் பரதனது வாயிலிருந்து அற்புதமாய் வருகிறது. கைகேசிக்கு இதைச் சகிக்க முடியுமா? அபாரமாய்க் கோபம் வந்து விட்டது; கர்ச்சிக்கிறாள் இடி முழக்கம்போல்:

அவ்வுரை கேட்டலும்
அசனி ஏறென

வெவ்வுரை வல்லவள்
மீட்டும் கூறுவாள்;

'தெவ்வடு சிலையினாய்!
தேவி தம்பியென்(று)

இவ்விரு வோரொடும்
கானத் தான்'
என்றாள்.

[அசனி ஏறென வெவ்வுரை வல்லவள்: பேரிடிபோல் கர்ச்சித்துப் பேசக்கூடியவளான கைகேசி; தெவ்வடு சிலையினாய்; பகைவர்களையெல்லாம் வெல்லக்கூடிய வில் ஏந்தியவன்தான் நீ; உன் வீரத்தை என்னத்தைச் சொல்ல! என்னடா இது! பெண் பிள்ளை மாதிரி நடந்துகொள்ளுகிறாய்? விஷயத்தைச் சொல்லுகிறேன் கேள்: தேவி தம்பியென்று இவ் விருவரொடும் கானத்தான்: மனைவி தம்பியாகிய லக்ஷ்மணன் இரண்டு பேரோடும் எங்கே போயிருக்கிறான் தெரியுமா? காட்டுக்குத்தான் போய்விட்டான். எவன் காலில் போய் விழவேண்டும் என்று சொல்லுகிறாயோ அந்த ராமன்தான் காட்டுக்குப் போனவன்.]

தந்தை பிரிவால் ஏற்பட்ட துயரத்தை அண்ணன் ராமனைக் கொண்டு தீர்க்க நினைத்தான் பரதன். ராமனிடம் போகக் கால் எடுத்து வைக்கிறான். மறுபடியும், பேரிடி விழுந்த மாதிரி, "காட்டுக்குப் போய்விட்டான் ராமன்" என்ற கொடுமையான வார்த்தை அவன் காதில் விழுகிறது! அதையும் கூசாமல் கூறியவள் கைகேசிதான்.



கம்பர் தரும் காட்சி

— டி.கே.சி —

62. மீண்டும் பேரிடி

கேகய நாட்டிலிருந்து ஒரே ஆத்திரத்தோடு வந்தான் பரதன் — தந்தையைப் பார்த்துவிட வேண்டும், அண்ணனைப் பார்த்துவிட வேண்டும் என்று. தந்தை இருக்கக்கூடிய இடத்தையெல்லாம் போய்ப் பார்த்தான். எங்கும் தென்படவில்லை. என்னமோ, காரியம் தெரியவில்லையே என்று மனம் குலைந்தவனாய் நிற்கிறான். அந்த வேளை கைகேசி ஒரு விதமான வருத்தமுமில்லாமல் சொன்னாள், தந்தை வானுலகத்துக்குப் போய் விட்டான் என்பதாக. அந்தக் கடுஞ் சொல்லைச் சகிக்க முடியாமல் அப்படியே மூர்ச்சித்து விழுந்து விட்டான் பரதன். சிறிது நேரங் கழித்து உணர்ச்சி வந்தது. இறந்த தந்தையின் காரணமான துயரம் அவன் இதயத்தைத் தாக்கியது; இதயம் இடிந்தவனாய்ப் புலம்புகிறான் :—

எத்தனை எத்தனை ஆண்டுகளாகவோ உன் குடை நிழலின் கீழிருந்து எண்ணிறந்த குடிகள் உயிர் வாழ்ந்தார்களே, இனி அவர்கள் பாடு என்ன? அவர்களை மறந்து விட்டல்லவா நீ சொர்க்க வாழ்வுக்கு ஆசைப்பட்டுப் போய் விட்டாய்?

'பற்பகல் நிழற்றும்நின்
கவிகை பாய்நிழல்
நிற்பன பல்லுயிர்
உணங்க, நீநெடும்
கற்பக நறுநிழல்
காத லித்தியோ !
மற்பக மலர்ந்ததோள்
மன்னர் மன்னனே.'

[பற்பகல்: பல நாளாக, — அநேக வருஷங்களாக; நிழற்றும் நின் கவிகை பாய்நிழல் நிற்பன பல் உயிர்: குளிர்ந்த நிழலைத் தரும் உன்னுடைய குடையின் விரிந்த பாதுகாப்பின் கீழ் நின்றுள்ள குடிகள் எல்லாம்; உணங்க: கஷ்டத்துக்குள்ளாகி யிருக்க; நீ நெடும் கற்பக நறு நிழல் காதலித்தியோ: நீ மாத்திரம் அந்த தேவலோக கற்பகத் தரு நிழலில் இருக்க விரும்பி விட்டாயோ? என்ன இரக்கமின்மை! என்ன சுயநலம்! மற்பக மலர்ந்த தோள்: மல் யுத்தத்தின் சக்தியே வெளி வருகிறது என்று தோன்றும்படி விரிந்த தோளையுடைய; நெடும்: விசாலமான.]

தாங்க முடியாத துயரம் இப்படியெல்லாம் பேசச் செய்கிறது. தந்தை கருணையற்றவன் என்று சொல்லுகிறதில் எவ்வளவு ஆற்றாமை! அவனுடைய வீரத்தை எண்ணின மாத்திரத்தில் அது ஒரு தனியான துயரத்தைக் கிளறி விடுகிறது;—

"முன்னம் ஒரு தடவைதான் சம்பராசுரனால் தேவர்கள் தேவ லோகத்தை விட்டு அகல நேர்ந்தது. சம்பரனை நீ கொன்று தேவர்களுக்குப் பூர்வ பதவியைக் கொடுத்தாய். அந்தத் தேவர்களுக்கு இப்போது மறுபடியும் சங்கடம் நேர்ந்து விட்டதா?

'இம்பர்நின்(று) ஏகினை ;
இருக்கும் சார்பிழந்(து)
உம்பர்வந்(து) உன்கழல்
ஒதுங்கி னார்கொலாம் :
சம்பரன் அனையஅத்
தானைத் தானவர்
அம்பரத்(து) இன்னமும்
உளர்கொ லாம்ஐயா !'

[இம்பர் நின்று ஏகினை: இந்த உலகத்தை விட்டுப் போய் விட்டாய்; இருக்கும் சார்பிழந்து: வாழ்வதற்கான இருப்பிடத்தை இழந்து; உம்பர் வந்து உன் கழல் ஒதுங்கினார்கொலாம்: தேவர்கள் வந்து உன்னிடம் சரண் புகுந்தார்களா? தானைத் தானவர்: ஆயுதங்களை யுடைய அசுரர்; அம்பரத்து இன்னமும் உளர்கொலாம் ஐயா: முன்னமே தான் மாண்டார்களே, வானுலகத்தில் உயிர்த்தெழுந்து இன்னமும் இருக்கிறார்களோ?]

துயரத்தைத் தாங்க முடியாதபடி இப்படியெல்லாம் புலம்பி நைகிறான்

ஆகாச வெடி

"சிறையிலிருக்கும் காங்கிரஸ் காரியக் கமிட்டி மெம்பர் டாக்டர் சையத் மாமூதுக்கு அனுப்பிய வாத மருந்தை பம்பாய் சர்க்கார் அனுப்பியவருக்கே திருப்பி அனுப்பி விட்டார்கள்."

—ஒரு செய்தி.

அதைப் பிடிவாத மருந்தாக மாற்றி ஜனாப் ஜின்னாவுக்கு அனுப்பிப் பார்ப்பதுதானே ?

★

"திருவாங்கூர் சமஸ்தான திவான் பதவியை ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் ராஜீநாமாச் செய்யக் கூடுமென்று ஒரு பத்திரிகை நிருபர் கூறுகிறார்."

—ஒரு செய்தி.

உலகத்தில் எத்தனையோ காரியங்கள் நடக்கக் கூடும்; ஆனால் நடப்பது தானில்லை. உதாரணமாக, மேற்படி திவான் பதவிக்கு நாம் விண்ணப்பம் போடக் கூடும்; ஆனால் போடவில்லை!

★

"பம்பாய்த் துறைமுகத்தில் வெடித்த வெடியினால் அதிக உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. வெடிக்குக் காரணம் என்னவென்று சரியான விவரம் தெரியவில்லை."

—ஒரு செய்தி.

இது பூமியில் வெடித்த வெடியாகையால், நமது ஆகாச வெடி நிருபருக்கும் விவரம் ஒன்றும் தெரியவில்லை!

★

"பம்பாய்த் துறைமுகத்தில் ஏற்பட்ட தீ விபத்துச் செய்தியைப் பிரசுரிக்கக் கூடாதென்று பம்பாய் ஸெண்டினல் பத்திரிகைக்கு சர்க்கார் ஓர் உத்தரவு போட்டனர்."

- ஒரு செய்தி.

ஏற்கெனவேதான் இந்தச் செய்தி காட்டுத் தீ போல் பரவி விட்டதே என்று சர்க்கார் நினைத்திருக்கலாம்.

★

"எப்போதும் வேவல் என்ற பெயரை உச்சரிக்க வேண்டுமென்ற ஆசையால் டெஸ்மாண்ட் மக்கார்த்தி என்பவர், தான் வளர்த்து வரும் பூனைக்கு வேவல் என்று பெயர் வைத்திருக்கிறார்."

— தினசரி.



இதன் காரணமாக, நமது படைகள் பர்மாவைப் பிடிப்பதற்குக் கிளம்புகையில் வேவல் குறுக்கே வருவாரானால் அதை அபசகுனமாகக் கருதத் தேவையில்லை!

★

"ஹிட்லரின் பழைய கூட்டாளியான ரூனிக் காலடியர் என்பவர் இறந்துவிட்டார். இவர்தான் ஹிட்லர் தயாரிக்கும் எந்தப் பிரகடனங்களையும் படிப்பது வழக்கம்."

—ஒரு செய்தி.

ஹிட்லர் பிரகடனங்களைப் படிக்க யமலோகத்திலும் ஆள் தேவைதான்!

★

"ஒரு போஸ்ட் கார்டு பதினெட்டு வருஷங்கள் கழித்து விலாசதாரைக் கண்டுபிடிக்க முடியாமல் அதை அனுப்பியவருக்கே திருப்பிக் கொண்டு வந்து கொடுக்கப்பட்டது."

—காசிச் செய்தி.

பதினெட்டு வருஷங்களுக்குப் பிறகு அனுப்பியவருடைய விலாசத்தையாவது கண்டு பிடித்தார்களே!

★

"பம்பாயில் ஏற்பட்ட வெடி விபத்தின் காரணமாக தங்கக் கட்டியொன்று கட்டிடத்தின் மூன்றாவது கூரையையும் நாலாவது கூரையையும் துளைத்துக் கொண்டு மோடிவாலா என்னும் கிழவர் வீட்டு மாடியில் வந்து விழுந்தது. மோடிவாலா அதைப் போலீஸாரிடம் ஒப்புவித்து விட்டார்."

—தினசரி

கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக்கொண்டு கொடுத்தாலும் கிழவர் மோடிவாலா கொடுத்து வைக்கவில்லை போலும்!

★

"அரசியல் நிலைமையைப் பொறுத்த வரையில் உலகத்திலேயே இந்தியாதான் அதிக அமைதி பொருந்திய இடம் என்று கூறுவேன்" என்று ஸர் பிரோஸ் கான் நூன் லண்டனில் கூறினார்.

—ஒரு செய்தி.

ஆக்ஷேபணையென்ன? அதிலும் ஆகாகான் அரண்மனையில் உள்ள அமைதி வேறு எங்கும் கிடையாது!

ஐந்து ரூபாய் பரிசு: சென்ற இதழில் வெளியான "வித்தியாசம்" என்னும் [illegible] துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: ஆர். ராஜேஸ்வரி, நெ 4. கேசவ ஐயர் தெரு, ஜி.டி. சென்னை.

பராமுகம் ஏன் ஐயா?

நாடோடி

[டில்லியில் உள்ள வைஸராய் மாளிகையில் லார்ட் வேவல் தம் அறையில் தனியாக ஸோபாவில் சாய்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருக்கிறார். அப்பொழுது உள்ளே யாரோ மெள்ள அடி மேலடி வைத்து நுழைவது காது கேட்கிறது. யார் என்று பார்ப்பதற்காக வைஸராய் தம் முகத்தை மறைத்துக் கொண்டிருந்த பத்திரிகையை எடுக்கிறார். எதிரே நிற்கும் ஆசாமியைப் பார்த்ததும் பயந்து "சப்ராஸி! சப்ராஸி!" என்று கத்துகிறார்]

வந்த ஆசாமி :—சப்ராஸி, சப்ராஸி என்று கதறி ஒரு பிரயோசனமும் இல்லை, பிரபோ! தங்கள் சப்ராஸிகள் எல்லாரும் என்னைக் கண்டதும் பயந்து ஓடி ஒளிந்து கொண்டு விட்டார்கள்.

வேவல் :—காரியதரிசி! காரியதரிசி!

வந்த ஆசாமி :—ஊஹூம்! காரியதரிசியைக் கூப்பிட்டும் பிரயோசனமில்லை. தங்கள் காரியதரிசியும் என்னைக் கண்டதும் நடுங்கி ஓடிப்போய் விட்டார்.

வேவல் :—ஐயோ! நான் என்ன செய்வேன்! ஏ ஆபத்பாந்தவனான சர்ச்சிலே! ஏ அனாத ரக்ஷகனான அமெரிகே! இந்த ஆபத்து சமயத்தில் என்னைக் காப்பாற்ற மாட்டீர்களா?

[ஸோபாவுக்குப் பின்னால் ஒளியப் பார்க்கிறார்.]

வந்த ஆசாமி :—ஏன் ஸ்வாமி, என்னைக் கண்டால் இப்படி ஓடி ஒளிகிறீர்? சற்றுத்தான் இப்படி வந்து என்னைப் பாருமே! இரண்டு வார்த்தைதான் பேசுமே! ஏன் இத்தனை பராமுகம்?

வேவல் :—யார் ஐயா நீர்? எதற்காகத் திடுதிப்பென்று வந்து இப்படி என்னைப் பயமுறுத்துகிறீர்?

வந்த ஆசாமி :—நான் யார் என்பது தெரியாதது போல் பேசுகிறீர்களே! என்னை நீங்கள் பார்த்ததில்லையா?

வேவல் :—கிடையாது.

வந்த ஆசாமி :—ரொம்ப அழகாய் இருக்கிறது! கொஞ்ச நாளைக்கு முன்பு, தங்களுடைய சுற்றுப் பிரயாணத்தின் போது சென்னைக்கு வந்தீர்களே, அப்பொழுது ராஜாஜி என்னைக் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு தங்களைப் பார்க்க வந்திருந்தாரே, ஞாபகம் இருக்கிறதா?

வேவல் (துள்ளிக் குதித்துக் கொண்டு):-ஐயயோ! ஸ்ரீமான் அரசியல் பிரச்னையா நீர்? சப்ராஸி! சப்ராஸி! யார் அங்கே! ஒரு சப்ராஸியும் கிடையாதா? யாராவது இந்த ஆசாமியைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுங்களேன்!

ஸ்ரீமான் அரசியல் பிரச்னை :—ஏன் என்னைக் கண்டு இத்தனை பயப்படுகிறீர்கள்? தாங்கள் வைஸராயாக வந்ததிலிருந்து பார்க்கிறேன், என் பெயரைக் கேட்டாலே ஓடி ஒளிகிறீர்களே!

வேவல் :—எனக்குத்தான் உம்மைப் பார்க்கக்கூடப் பிடிக்கவில்லை என்பது தெரிந்திருக்கிறதே, அப்படி இருக்கும்பொழுது எதற்காக வந்து என் கழுத்தை அறுக்கிறீர்?

ஸ்ரீமான் அரசியல் பிரச்னை :— ஏழை என்மீது பராமுகம் ஏன் ஐயா என்று கேட்பதற்காகத்தான். தாங்கள் வைஸராயாக வந்ததிலிருந்து என்னைப்பற்றி ஒரு வார்த்தையாவது பேசுவீர்களா என்று பார்த்தேன். தாங்கள் நான் இருக்கிறேனா, செத்தேனா என்று கூடக் கவனிக்கவில்லை. அதற்குப் பிறகு சமீபத்தில் இந்தியாவில் எல்லா இடங்களையும் 69 நாள் சுற்றிப் பார்த்தீர்களே, அப்பொழுதாவது என்னைக் கண்டு பேசுவீர்களோ என்று பார்த்தேன். அப்பொழுதும் பேசவில்லை. சென்னையில் மட்டுந்தான் ராஜாஜி என்னைக் கையைப் பிடித்துத் தங்களிடம் அழைத்துக்கொண்டு வந்தார். அப்பொழுதாவது என்னிடம் சரியாக முகம் கொடுத்துப் பேசினீரா கிடையாது.

வேவல் :—இந்தாரும் ஸ்ரீமான் அரசியல் பிரச்னை! பழைய வைஸராய்கள் எல்லாரும் உம்மை அத்தனை கவனித்தார்களே, உம்முடைய காரியம் ஆயிற்றா? லார்ட் லின்லித்கோவைப் பார்க்கச் சென்ற 56 தலைவர்களும் உம்மைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு வைஸராய் மாளிகைக்குச் சென்றார்களே, ஏதாவது கதிமோட்சம் கிடைத்ததோ! அவர்களால் முடியாத காரியத்தை நான் மட்டும் செய்வேன் என்று எப்படி எதிர்பார்க்கிறீர்?

ஸ்ரீமான் அரசியல் பிரச்னை:— எப்படியா? தாங்கள் ஸோல்ஜராக இருக்

தவராச்சே, மலேயா முதலிய நாடுகளில் என் போன்றவர்களால் எவ்வளவு தீங்கு விளைந்தது என்பதை உணர்ந்தவராச்சே, எதிரி இந்தியாவுக்குள் புகுந்துவிட்டானே என்பதனால் தான்.

வேவல்:—மலேயாவில் இருந்த நிலைமை இப்பொழுது இங்கு இல்லை என்பது மறந்துவிடுகிறீர்?

பிரச்னை:—அது எப்படி?

வேவல்:—மலேயாவில் நாங்கள் ஜப்பானியர்களை எதிர்த்தபோது எங்களுக்கு அமெரிக்கர்கள் உதவிக்கு இல்லை. ஆனால் இப்பொழுதோ அப்படியில்லை. கடைசி அமெரிக்கன் உயிருடன் இருக்கும் வரை நாங்கள் போரிட்டே தீர்வோம்.

ஸ்ரீமான் அரசியல் பிரச்னை:—அப்படியானால் தாங்கள் என் விஷயத்தைக் கவனிக்கப் போவதில்லையா?

வேவல்:—உம்மைக் கவனிக்கவேண்டுமானால் முதலில் இந்த காந்தி, நேரு முதலியவர்களைச் சிறையிலிருந்து விடுவிக்க வேண்டுமே? அந்தக் காரியத்தை நான் செய்ய மாட்டேன்.

ஸ்ரீமான் அரசியல் பிரச்னை:—ஏன்?

வேவல்:—என்னய்யா! ஒவ்வொன்றுக்கும் ஏன், ஏன் என்று குடைந்து குடைந்து கேள்வி போட்டுக் கொண்டிருக்கிறீர்? உம் விஷயமாகச் சிபார்சு பண்ணி, எனக்குக் கடிதம் எழுதி அனுப்பினார்களே 112 ஆசிரியர்கள், அவர்களே விஷயத்தை அறிந்து கொள்ளவில்லையென்றால் உமக்கு எங்கே தெரியப் போகிறது?

பிரச்னை:—என்ன விஷயம்?

வேவல்:—என்ன விஷயமா? சொல்லுவதற்கு எனக்கே வெட்கமாய் இருக்கிறது. இருந்தாலும் என்ன பண்ணுகிறது? சொல்லுகிறேன். உம்மைப் பைசல் செய்யும் விஷயத்தில் எனக்கு ஒரு அதிகாரமும் கிடையாது. எல்லாம் அர்த ஆபத்பாந்தவனான சர்ச்சிலுக்கும், அனாத ரக்ஷகனான அமெரிக்குந்தான் உண்டு. வீணாக என் கழுத்தை அறுப்பதற்கு, அவர்கள் இரண்டு பேர் கழுத்தையும் போய் அறுத்துப் பாரும்...சரி, போய்விட்டு வருகிறீரா!

ஸ்ரீமான் அரசியல் பிரச்னை:—ஊஹூம்: நான் இப்பொழுது தங்களை விட்டுப் போவதாக உத்தேசமில்லை.

வேவல்:—அப்படியானால் நான் போகிறேன்.

[வைஸ்ராய் விழுந்தடித்துக் கொண்டு ஓடுகிறார்.]

கம்பன் கவி

[கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை]

ஆரியம் நன்குணர்ந்தோன் — தமிழின்
அழம் அளந்துகண்டோன்
மாரி மழைபோலக் — கவியின்
மழை பொழிந்திடுவோன்.

அயன் படைப்பினையும் — திருத்தி
அழகு செய்திடுவோன்
நயம் தெரிந்துகதை — நடத்தும்
நாடகக் கவிஞன்.

இந்திர ஜாலமெல்லாம் — கவியில்
இயற்றிக் காட்டிடுவோன்
மந்திரச் சொல்லாலே — உள்ளம்
மயங்கச் செய்திடுவோன்.

மூவர் முடிவேந்தர் — போற்றும்
முத்தமிழ்ப் பாவேந்தன்
தேவி அருளபெற்றோன் — தமிழ்த்தாய்
செய்தவத் தால்பிறந்தோன்.

புவிய ரசரெலாம் — நிதமும்
புகழ்ந்து பாராட்டும்
கவிய ரசர்தொழும் — பெரிய
கம்ப நாடாள்வான்.

கம்பன் கவிவாழ்க — இராம
கதை நிதமவாழ்க
அம்புவி மீதெங்கள் — அருமை
அமுதத் தமிழ்வாழ்க !

எத்திக்கும் போற்றும் இராமன் திருக்கதையைத்
தித்திக்கும் செந்தமிழில் செய்தளித்து—நித்தமுமிவ்
அம்புவியில மக்கள் அமுதம் அருந்தவைத்த
கம்பன் கவியே கவி

அமெரி சொல்கிறபடி காங்கிரஸ் தலைவர்கள் குற்றவாளிகள் என்பது அநேகமாக நிச்சயமாயிருக்கும் பட்சத்தில், அவர்களைப் பாதுகாப்புச் சிறை என்று சொல்கிற அரண்மனையில் சுகமாக வைத்திருப்பது அநியாயமாகும். அவர்களுடைய தூண்டுதலினாலே தண்டவாளத்தைப் பெயர்த்தவர்களுக்குத் தூக்குத் தண்டனையும் ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டிருக்கின்றன. அப்படியிருக்கும்போது, அவர்களைத் தூண்டி விட்டவர்களான உண்மைக் குற்றவாளிகளைச் சுகமாக வைத்திருப்பது என்ன நியாயம்? அவர்களை நியாய விசாரணைக்குக் கொண்டு வந்து, குற்றம் ருசுவாகும் பட்சத்தில் குற்றத்துக்குத் தகுந்த தண்டனை அளிக்கவேண்டுமல்லவா?

விசாரணையில் காங்கிரஸ் தலைவர்கள் குற்றமற்றவர்கள் என்று ஏற்படும் பட்சத்தில், அவர்களை விடுதலை செய்துவிட்டு, அமெரியைச் சிறைப்படுத்த வேண்டும். காங்கிரஸ் திட்டம் என்று ஒரு துராக்கிரஹத் திட்டத்தை விளம்பரப்படுத்திப் பல அக்கிரமச் செயல்களுக்குக் காரணமாயிருந்தது மல்லாமல், இந்திய மக்களின் உண்மைத் தலைவர்கள் மீது பொய்யான பழி சுமத்தி அதையே சாதித்து வந்ததற்காக அவர் மேல் வழக்கு நடத்தித் தக்க தண்டனை அளிக்க வேண்டும்.

* * *

மேற்படி புளுகை இந்தியா மந்திரி மறுபடியும் சாதிப்பதற்குச் சமீபத்தில் நேர்ந்த சந்தர்ப்பம் என்னவென்றால், இந்தியாவின் ஐந்து பெரிய மாகாணங்களில் கவர்னர் ஆட்சியை இன்னும் ஒரு வருஷம் நீடிக்கச் செய்வதற்காக பிரிட்டிஷ் பார்லிமெண்டில் கொண்டு வரப்பட்ட மசோதாவேயாகும்.

இது சம்பந்தமாகவும் கர்னல் அமெரி காங்கிரஸ் தலைவர்கள் மீது ஒரு குற்றத்தைச் சுமத்தினார். மாகாணங்களில் ஜனநாயக ஆட்சி முடிவடைந்ததற்குக் காரணம் காங்கிரஸ் தலைவர்களின் சர்வாதிகார உத்தரவுதான் என்றார். இது உண்மை என்பதாக ஒரு நிமிஷம் வைத்துக்கொள்ளலாம். அப்படியானால் ஜனநாயகத்துக்காகப் பிராணனை விட்டுக் கொண்டிருக்கும் பிரிட்டிஷ் சர்க்காரின் கடமை என்ன? காங்கிரஸின் சர்வாதிகாரத்தை நிந்தித்து விட்டு கவர்னரின் சர்வாதிகாரத்தை ஸ்தாபிப்பதுதானா அவர்களுடைய கடமை?

காங்கிரஸ் சர்வாதிகாரத்தை உதறித் தள்ளி உண்மையான ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்திக் கொள்ளப் பொது ஜனங்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளிக்க வேண்டாமா?

காங்கிரஸ் மந்திரிகள் ராஜிநாமா செய்த வுடனேயே பொதுத் தேர்தல் நடத்திப் பொதுஜன அபிப்பிராயத்தைக் கேட்டிருக்க வேண்டும். அப்போது செய்யத் தவறிய காரியத்தை நாலு வருஷம் கழித்து இப்போதாவது செய்ய வேண்டும்.

காங்கிரஸ் மந்திரிகள் ராஜிநாமா செய்து நாலு வருஷம் கழித்து, இன்னமும் கவர்னரின் யதேச்சாதிகார ஆட்சியை நீடித்துக் கொண்டு போவதைப் போன்ற அக்கிரமம் — ஜனநாயகத் துரோகம் — முறைகேடான காரியம் வேறு இருக்க முடியாது. காங்கிரஸ் தலைவர்களின்மேல் திருப்பித் திருப்பிக் குற்றம் சுமத்திக்கொண்டே போவதால் மேற்படி அக்கிரமத்தை மூடி மறைத்து விட முடியாது.

சொல்ல நாம் தயாராயில்லை. இல்லவே இல்லை! பின் என்ன சொல்கிறோ மென்றால், "அது சர்வ நிச்சயமான புளுகு" என்றுதான்!

* * *

பழைய கதையைக் கொஞ்சம் ஞாபகப்படுத்திக் கொள்வோம். 1942—ஆகஸ்டில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கூடி இந்தியாவின் சுதந்திரத்தைப் பிரிட்டிஷார் ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும், இல்லாவிட்டால் பொதுஜன இயக்கம் தொடங்கவேண்டியிருக்கு மென்றும் தீர்மானம் செய்தது. ஆனால் அந்தப் பொதுஜன இயக்கத்தின் வேலைத் திட்டம் என்னவென்று சொல்லவில்லை. அப்படிப்பட்ட திட்டம் ஒன்று காங்கிரஸ் தலைவர்களால் தயாரிக்கப்பட்டிருந்ததாகவே தெரியவில்லை. அதைப் பற்றி எந்தப் பத்திரிகையிலும் எந்த விதமான செய்தியும் வரவில்லை.

மேற்படி அகில இந்தியக் கமிட்டியின் தீர்மானம் நிறைவேறியதும் காங்கிரஸ் தலைவர்களுக்கு மூச்சு விடக்கூட நேரங் கொடுக்காமல் சர்க்கார் அவர்களைக் கைது செய்து சிறைக்குக் கொண்டு போய் விட்டார்கள்.

நாடெல்லாம் இன்னது செய்வதென்று தெரியாமல் ஒரே திகைப்பில் ஆழ்ந்திருந்தது.

அந்தச் சமயத்திலேதான் அமெரி பிரிட்டிஷ் ரேடியோவில் தமது திருவாயைத் திறந்தார். காங்கிரஸ் தலைவர்களைக் கைது செய்ததின் காரணத்தைத் தெரிவித்தார். அவர்கள் தயாரித்திருந்த வேலைத் திட்டம் என்பதாக ஒரு வேலைத் திட்டத்தையும் அவர் வெளியிட்டார்! அதிலேதான் தந்தி அறுத்தல் — தண்டவாளம் பெயர்த்தல் முதலிய காரியங்கள் முதன்முதலாகப் பிரஸ்தாபம் ஆயிற்று. அமெரியின் பிரசங்கத்துக்குப் பிறகு, தேசத்தின் பல பாகங்களிலும் மேலே குறிப்பிட்ட அக்கிரமமான காரியங்கள் ஓரளவு நடந்தன.

அமெரியின் ரேடியோப் பிரசங்கம் நடந்த அதே வாரத்தில் நாம் எழுதிய தலையங்கத்தில், மேற்படி அக்கிரமமான காரியங்களுக்கெல்லாம் பொறுப்பாளி உண்மையில் அமெரிதான் என்று எழுதியிருந்தோம்.

தந்தியறுத்தல் முதலிய காரியங்கள் ஒரு நாளும் காங்கிரஸ் வேலைத் திட்டமாயிருக்க முடியாதென்றும், அப்படியே அத்தகைய திட்டத்தைக் காங்கிரஸ் தலைவர்கள் தயாரித்திருந்தாலும் அது தேசமெங்கும் பரவுவதற்கு வேண்டிய அவகாசம் இருந்திருக்கவில்லையென்றும், அமெரியின் அவசர ரேடியோப் பிரசங்கத்தினால்தான் அது பரவியிருக்க வேண்டுமென்றும் சுட்டிக்காட்டியிருந்தோம்.

அதற்குப் பிறகு நேசத்தில் எவ்வளவோ உண்மைகள் வெளியாகியிருக்கின்றன. மேற்படி துராக்கிரஹைச் செயல்களைக் கண்டனம் செய்து மகாத்மா எழுதிய கடிதத்தை சர்க்கார் வெளியிடாமல் அமுக்கி விட்டார்கள் என்று தெரிய வந்தது.

பாதுகாப்பிலிருந்து வெளியே வந்த ஸ்ரீமதி சரோஜினி தேவி "காங்கிரஸ் தலைவர்கள் அப்படிப்பட்ட வேலைத் திட்டத்தைத் தயாரிக்கவில்லை. அம்மாதிரி வேலைகளை ஒப்புக் கொள்ளவுமில்லை" யென்று திட்டமாய்த் தெரிவித்திருக்கிறார்.

இவ்வளவுக்கும் பிறகு, கர்னல் அமெரி அதே புளுகை, "அநேகமாய் நிச்சயம்" என்று கூறுகிறார் என்றால், அதன்பொருட்டு அவரை நாம், "அநேகமாய் அயோக்கியர்" என்றாவது, "அநேகமாய்ப் புளுகர்" என்றாவது சொல்வது ஒரு நாளும் சரியாகாதுதான்! நிச்சயமாக அப்படி என்று சொல்வதுதான் நியாயமாயிருக்கும்.

* * *

அமெரியின் புளுகைப் பற்றி நாம் ஏன் இவ்வளவு கவலைப்பட வேண்டும் என்று கேட்கலாம். அதைத் தெரிந்து கொள்ள அமெரி ஏன் மேற்படி புளுகைத் திருப்பித் திருப்பிச் சொல்கிறார் என்று யோசிக்க வேண்டும். அமெரிக்கா, சீனா முதலிய தேசங்களிலுள்ள சிலர் இந்தியாவின் சுதந்திரக் கோரிக்கையில் காட்டும் அனுதாபத்தை இல்லாமற் செய்ய வேண்டும் என்பதுதான் அவருடைய நோக்கமாயிருக்க வேண்டும். காங்கிரஸ்காரர்கள் ஜப்பானைச் சேர்ந்தவர்கள் என்ற அபிப்பிராயத்தை உண்டாக்குவதற்காகத்தான் இப்படிக் காங்கிரஸின் மீது தோஷாரோபணம் செய்து கொண்டு அலைகிறார்.

ஆகையினாலேதான் நாமும், "ஐயா, அமெரியே! ஒன்று, காங்கிரஸ் தலைவர்களின் மேல் சுமத்தும் குற்றத்தை ருசுப்படுத்தும்; இல்லாவிட்டால் அந்த அவதூறைக் கௌரவமாக வாபஸ் வாங்கிக் கொள்ளும்!" என்று வற்புறுத்த வேண்டியதாயிருக்கிறது.

அனேகமாய் அயோக்கியர்!

உலகத்தில் எந்தக் காரியத்திலும் பிரிட்டிஷார் மற்றவர்களுக்குப் பின் வாங்க மாட்டார்கள்.

இல்லை; தப்பு! மேற்படி முதல் வாக்கியத்தை வெற்றிகரமாக வாபஸ் பெற்றுக் கொள்வதற்கு நேயர்களின் அநுமதியைக் கோருகிறோம்.

ஆம்; பிரிட்டிஷ் துருப்புகள் சில சமயம் போர் முனைகளில் — பின்னால் வரப்போகிற பெரும் வெற்றிகளை முன்னிட்டுப் — பின் வாங்குவதுண்டு. வெறும் விம்புக்காக உயிர்களைப் பலி கொடுப்பதில் பிரிட்டிஷ் தளபதிகளுக்கு நம்பிக்கை கிடையாது.

ஆனல் பிரிட்டிஷ் இராஜ தந்திரிகள் மட்டும் எந்தக் காரியத்திலும் மற்றவர்களுக்குப் பின் வாங்க மாட்டார்கள். பொய் புளுகும் வித்தையிலே கூட வேறு யாருக்கும் பின் வாங்காத மகா தீரர்கள் அவர்கள்.

அண்டப் புளுகன் என்றும், ஆகாசப் புளுகன் என்றும் பழைய கதைகளிலே கேட்டிருக்கிறோம். அந்த அண்டப் புளுகர்களும் ஆகாசப் புளுகர்களும் இந்தக் காலத்து மேனாட்டு இராஜ தந்திரிகளுக்கு முன்னால் கன்னத்திலே போட்டுக்கொண்டு தோப்புக்கரணமும் போடவேண்டும். புளுகிலே அவ்வளவு சமர்த்தர்கள் மேனாட்டு இராஜ தந்திரிகள் என்பது பிரசித்தம்.

மேனாட்டு இராஜ தந்திரப் புளுகுகளிலேயும் கெபல்ஸ் புளுகு என்பது சில காலமாகப் பிரபலமடைந்திருக்கிறது. எப்பேர்ப்பட்ட பச்சையான பொய்யையும் திருப்பித் திருப்பிச் சொல்வதினால் அதை நிஜமாக்கி விடுவதுதான கெபல்ஸ் புளுகின் அரும் பெரும் சிறப்பாகும். இப்பேர்ப்பட்ட சிறப்பைக் கேவலம் ஒரு ஜெர்மன் நாஜிக்கே முழுதும் விட்டு விடலாமா? அப்படி விட்டு விட்டால் அது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பெருமைக்கே இழுக்காகுமல்லவா?

எனவே, புளுகுக் கலையிலும் நாஜி கெபல்ஸைத் தோற்கடித்தே தீருவேன் என்று கங்கணங் கட்டிக் கொண்டிருக்கிறார் ஒரு பிரபல பிரிட்டிஷ் இராஜ தந்திரி! அவர்தான் அமெரி என்னும் இந்தியா மந்திரி!

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலே நமது இந்தியா தேசத்துக்கு வேறு ஒரு சிறப்பும் இல்லா விட்டாலும், கெபல்ஸைத் தோற்கடிக்கக் கூடிய ஒரு வீரப் புளுகனை மந்திரியாகப் பெற்றிருக்கும் சிறப்பு இருந்து வருகிறது.

*   *   *

சென்ற வாரத்தில் பிரிட்டிஷ் பாராளு மன்றம் என்னும் காமன்ஸ் சபையில் இந்தியா மந்திரி அமெரியானவர் ஒரு விசேஷ அமெரி முத்திரை வாய்ந்த புளுகைச் சொன்னார். இதை அவர் எத்தனையாவது தடவையாகச் சொன்னார் என்று கணக்கு வைப்பதை நாம் கைவிட்டு வெகு காலமாயிற்று. இன்னும் எத்தனை தடவை சொன்ன பிறகு அது நிஜமாக மாறும் என்பதையும் நாம் ஊகிக்க முடியவில்லை.

அது என்ன புளுகு என்று கேட்டால் சுமார் இருபத்தேழு மாதத்துக்கு முன்னால், அதாவது 1942—ஆகஸ்டில் இந்தியாவில் நடந்த தந்தி அறுத்தல், தண்டவாளம் பெயர்த்தல் முதலிய காரியங்களுக்குப் பொறுப்பாளிகள் காங்கிரஸ் தலைவர்கள் என்பதுதான்.

மேற்படி குற்றச்சாட்டை இந்தத் தடவை அமெரி துரை மிக்க அழுத்தமாகவே சுமத்தினர்.

விடாக் கண்டராகிய ஸோரன்ஸென் "அந்த வருந்தத் தக்க சம்பவங்களை நிஜமாகவே காங்கிரஸ் தூண்டிவிட்டது என்று உண்மையாகச் சொல்கிறீரா?" என்று மடக்கிக் கேட்டதற்கு, "ஆம், நிச்சயமாகத்தான்! பொதுஜன துராக்கிரகத்தைத் தூண்டி இந்திய அரசாங்கத்தை ஸ்தம்பிக்கச் செய்வதற்கான அந்த இயக்கத்துக்குக் காங்கிரஸ் தலைவர்களே பொறுப்பாளிகள் என்பது அநேகமாக நிச்சயம்" என்று அமெரி ஒரு பெரிய போடு போட்டார்.


அது எப்பேர்ப்பட்ட போடு என்று கேட்டால், "இந்தியா மந்திரி அமெரி பரம அயோக்ய சிகாமணி என்பது அநேகமாக நிச்சயம்" என்று சொன்னல் எப்படி? அநேகமாக அப்படித்தான்!

ஆனல், அமெரியின் மேற்படி கூற்றை மட்டும், அதாவது "ஆகஸ்ட் கலவரங்களுக்குக் காங்கிரஸ் தலைவர்கள்தான் காரணம்" என்று சாதித்ததை, "அநேகமாய்ப் புளுகு" என்று

-உம்மன்


"பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்து இன்னும் ஐந்து வருஷங்களில் இந்தியா விலகிவிடும்" என்று ஜோஸ்யம் சொல்கிறார், காமன் வெல்த் கட்சித் தலைவர் ஸர் ஆக்லண்ட்.
"ஜான்புல் ஸார்! கூடியசீக்கிரத்தில் உங்கள் பணத்தொந்தி கரைந்து போகும். கவலைப்பட வேண்டாம்!"
ரேகை சாஸ்திரம் சொல்லப்படும்.
ஸர் ஆர். ஆக்லண்ட்
ஜான்புல்
ஹிந்து மகாசபைத் தலைவர் வீரசாவர்க்கார் சமீபத்தில் செய்த பிரசங்கத்தில் கத்தியைத் தீட்டி வைத்துக் கொள்ளும்படி ஹிந்துக்களுக்கு உபதேசம் செய்தார்!
டாக்டர் மூஞ்சே ஹிந்துக்களைக் குதிரை சவாரி செய்யப் பழகிக்கொள்ளும்படி உபதேசித்தார்!

நிகழ்ச்சிச் சித்திரம்





பண்டிதரும், பாமரரும் புகழ்கின்றார்
பார்த்தவர்கள் எல்லோரும் மகிழ்கின்றார்
எங்கே?

திருச்சி முனிசிபல் பப்ளிக் ஹாலில்

20 - 4 - 44

வியாழக்கிழமை முதல்

அற்புதக் கதையின் ஆரம்பம்!
அன்பருக்கெல்லாம் ஆனந்தம்!!

★

நானிலம் எங்கும் புகழ் பெற்று
நற்சாட்சிப் பத்திரங்கள் பல பெற்று
சென்ற விடமெல்லாம் ஜெயக்கொடி
நாட்டிவரும்

காரைக்குடி ஸ்ரீ ராம பால கான விநோத சபையாரால்

தாக சாந்தி

என்னும் சீர்திருத்த
நாடகம் நடைபெறும்.

★

சபாவின் முழுநேர தனி நடனக்
கச்சேரியை அதி விரைவில்
எதிர்பாருங்கள்!

புரோப்ரைட்டர்:
வைரம். O. A. AR. அருணாசலம் செட்டியார்

★

நேர்த்தியான தயாரிப்பு!

குறித்த காலத்தில் செய்து தரப்படும்.

●

சென்னையில் ஆப்டன் கலர் பிளாக்குகளுக்கும் லயன் பிளாக்குகளுக்கும் ரப்பர் ஸ்டாம்புகளுக்கும் இது சம்பந்தமான சகல வேலைகளுக்கும் பொறுப்புடனும் நம்பிக்கையுடனும் மிதமான சார்ஜில் தயாரிக்கும் இடம்.

●

நியூடன் & கம்பெனி

80, வாலாஜா ரோடு
மவுண்ட் ரோடு போஸ்ட்
சென்னை.

★

ளுக்குத் தெரியும். ஆனால் கம்பன் விழா நிர்வாகிகளுக்கு இது முற்றிலும் புதிதாகையால் அவர்கள் திணறித் திண்டாடி நடுங்கிப் போனார்கள். கொள்ளைக்காரர்களில் ஒரு வகுப்பார் "நாங்கள் இத்தனாந் தேதி வருகிறோம்!" என்று முன்னால் அறிவித்து விட்டு வருவார்களாம். அந்த தர்மத்தை யாவது இந்த கலாட்டாக்காரர்கள் அனுசரித்து முன்னால் தெரிவித்திருந்தால், தமிழன்பர்கள் முன் ஜாக்கிரதையா யிருந்திருக்கலாம். அவ்விதமின்றி திடுதிப்பென்று வந்து கூச்சல் போட்டு, ஒலி பெருக்கிகளை உடைத்து, ஸ்ரீ கதிரேசன் செட்டியார் போன்ற சாதுக் கிழவர்களை நடுநடுங்கச் செய்வது மகா அநியாயமாகும்!

அழகான குழந்தை ●

எரிக்கிற கட்சியைச் சேர்ந்தவர்கள் கம்பனுடைய கவிதை நன்றாயில்லை யென்றோ, "மகா கவி ஒட்டக்கூத்தருக்கு விழாக் கொண்டாடாமல் கம்பனுக்கு மட்டும் என்ன விழா வந்தது?" என்றோ ஆட்சேபிக்கவில்லை. கவிதைக்கும் இலக்கியத்துக்கும் சற்றும் சம்பந்தமில்லாத சமூக காரணங்களைக் கொண்டு ஆட்சேபிக்கிறார்கள்.

அழகான குழந்தை யொன்றைப் பார்த்தால், "அதன் அரசியல் கொள்கை என்ன? சமூகக் கொள்கை என்ன? அது விதவா விவாகத்தை ஆதரிக்கிறதா, இல்லையா?" என்று கேட்டுக் கொண்டிருக்கிறோமா? குழந்தையைக் கண்டதும் "என் கண்ணே!" என்று வாரி அணைத்துக் கொண்டு ஆனந்திக்கிறோம். கவிதை என்பது அழகான குழந்தையைப் போன்றது. குழந்தையைப் போற்றுவது போல் தான் கவிதையையும் போற்றவேண்டும்.

"கம்பன் மலர்" ●

கம்பன் திருவிழா கலாட்டாத் திருவிழாவாக மாறுவதற்குமுன்பு கோகலே மண்டபத்தில் கம்பனைப் பற்றிய ஒரு கவியை இளைஞர் ஒருவர் இசையுடன் படித்தார். அதைக் கேட்ட ரஸிகர்கள், "ஆகா! என்ன அழகான பாட்டு?" என்று பிரமித்தார்கள். பிற்பாடு, அது கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் பாட்டு என்று தெரிய வந்தது. அதில் சில அடிகளை "கம்பன் மல"ரிலிருந்து எடுத்து மற்றொரு பக்கத்தில் வெளியிட்டிருக்கிறோம். கம்பர் திருவிழாச் சந்தர்ப்பத்தில் சென்னைக் கம்பர் கழகத்தார் இந்த அழகிய "கம்பன் மல"ரை வெளியிட்டது பெரிதும் பாராட்டத் தக்கதாகும். இதில் முதற் கட்டுரையாக மகா மகோபாத்தியாய பண்டித மணியின் அரிய முன்னுரைப் பிரசங்கம் வெளியாகிறது. இன்னும், காலஞ் சென்ற நாவலர் திரு. வேங்கடசாமி நாட்டார், முதலிய பதினெண் தமிழ்ப் புலவர்களின் கட்டுரைகள் கம்பன் மலரில் மிளிர்கின்றன. விலை ரூ. 2-0-0.

பம்பாய் விபத்து ●

பலவீன ஹிருதயம் படைத்த ஆசாமி ஒருவனுக்கு லாட்டரியில் நாற்பதாயிரம் ரூபாய் பரிசு விழுந்தது. இந்த விஷயத்தை அவனிடம் போய் 'திடு திப்' பென்று சொல்லி வைத்தால் அதிர்ச்சியால் மாரடைத்து இறந்து போவான் என்று எண்ணி முதலில் அவனுக்கு நூறு ரூபாய் விழுந்திருக்கிறது என்றும், பிறகு இருநூறு என்றும், அப்புறம் ஆயிரம் இரண்டாயிரம் என்று மெது மெதுவாக உயர்த்திக் கொண்டே போனார்களாம். பம்பாய் சர்க்காரின் கதையும் அப்படித்தான் இருக்கிறது.

சமீபத்தில் பம்பாய்த் துறைமுகத்தில் வெடி விபத்து ஒன்று ஏற்பட்டு பிரமாதமாகத் தீ பரவி ஏராளமான உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டது. ஆனால் பம்பாய் சர்க்கார் விஷயத்தை ஒரே யடியாய்ச் சொல்லி விட்டால் அதைக் கேட்டுப் பலர் ஹிருதயம் உடைந்து செத்துப் போகப்போகிறார்களோ என்ற கருணையினால் செய்தியைச் சிக்கனமாகவும் கணக்காகவும் வெளியிட்டார்கள். முதல் நாள் அவர்கள் அறிக்கையில் இறந்தவர்கள் தொகை 96 என்றும், பிறகு 102 என்றும், அப்புறம் 316 ஆகவும் பெருகி வந்தது. யுத்தம் காரணமாகப் பல நாடுகளில் ஜனங்கள் செத்துப் போகிறார்கள். யுத்தம் வராமலே அது சம்பந்தமான உப காரணங்களினால் ஜனங்கள் உயிர் விடுவதை இந்தியாவில்தான் பார்க்கிறோம்.

மறைந்தார் ●

இந்தியாவின் முதுபெருங் கிழவரான சேலம் ஸ்ரீ சி. விஜயராகவாச்சாரியார் காலமானார். அப்பெரியார் தேசத்துக்குச் செய்த தொண்டுகள் அனந்தம். 1920-ல் அவர் அக்கிராசனம் வகித்த நாகபுரி காங்கிரஸ் மகாத்மா காந்தியின் தலைமையை ஏற்றுச் சரித்திரப் பிரசித்தி யடைந்தது. அத்தகைய தேசபக்த வீரர் 92 ஆண்டு பொறுமையுடன் வாழ்ந்திருந்தும் தேசம் சுதந்திரம் அடைவதைப் பார்க்க முடியாமல் காலஞ் செல்ல நேர்ந்ததை நினைத்துப் பெரிதும் வருந்துகிறோம்.

கல்கி

மலர் 3 | தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற தாயென்று கும்பிட்டடி பாப்பா — பாரதியார் | இதழ் 28

என்ன சேதி?

கம்பன் திருநாள்

கம்பன் பிறந்தான்; வளர்ந்தான்; இராம கதையைப் பாடி அரங்கேற்றினான். அதனால், தமிழ் மொழியை என்றும் அழிவில்லாத அமர மொழியாகச் செய்தான். தமிழ் நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் எல்லையற்ற புகழை அளித்தான். கம்பன் இராமாயணம் அரங்கேற்றிய தினந்தான் பங்குனி உத்திரத் திருநாள். அதைப் போன்ற புண்ணியத் திருநாள் தமிழ் மக்களுக்கு வேறு கிடையாது.

சில வருஷங்களாகத் தமிழ் நாட்டில் கம்பன் திருநாளைப் பல இடங்களிலும் கொண்டாடி வருகிறார்கள். இந்த வருஷத்தில் அந்தக் கொண்டாட்டம் உச்சத்தை அடைந்தது. பம்பாய் — கல்கத்தா முதல், நாகர் கோயில் வரையில் கம்பன் திருநாள் கொண்டாடப்பட்டது. கம்பன் கவிதைக்கே வாழ்நாளை அர்ப்பணம் செய்திருக்கும் தமிழன்பர்கள் முதல், "கம்பனைப் படிக்க எனக்கு அவகாசமில்லை; அவகாசமிருந்தால் படித்திருப்பேன்" என்று தெரிவித்த ஸர் பி. டி. ராஜன் வரையில் அநேகர் கம்பன் கொண்டாட்டங்களில் உற்சாகமாக ஈடுபட்டார்கள்.


சென்னை அமர்க்களம்

இந்த வருஷத்தில் கம்பன் திருவிழாக் கொண்டாட்டத்தில் மிகவும் விசேஷமான சம்பவம், சென்னையில் அத் திருவிழா பத்து தினங்கள் மிக விமரிசையாகக் கொண்டாடப் பட்டதாகும். தமிழன்பர் ஸ்ரீ டி. எம். நாராயணசாமிப் பிள்ளை அவர்களின் தலைமையில் தமிழ்த் தொண்டர்கள் சிலர் சேர்ந்து பெரு முயற்சி எடுத்துக் கம்பன் விழாக் கொண்டாட்டத்தைச் சென்னை நகரின் நாலா புறங்களிலும் நடத்தினார்கள். பத்து நாட்கள் சென்னையெங்கும் "கம்பன்" "கம்பன்" என்ற எதிரொலி கிளம்பிக்கொண்டிருந்தது. கடைசி தினம் கோகலே ஹாலில் மகா மகோபாத்தியாய பண்டித மணி கதிரேசன் செட்டியார் அவர்களின் தலைமையில் கொண்டாட்டம் 'அமர்க்கள'மாய் நடந்தது! அன்று கோகலே மண்டபம் உண்மையான அமர்க்களமாகவே ஆகி விட்டது. ஒலிபெருக்கிக் கருவிகளுக்கும், பீங்கான் கிண்ணங்களுக்கும், பிரசங்கிகளின் தொண்டைகளுக்கும் மகத்தான சேதம் ஏற்பட்டது. ஆனால் இந்தக் கலாட்டாவைக் குறித்துக் கம்பனின் பக்தர்கள் பிரமாதமான மனக் கிலேசம் அடைய வேண்டியதில்லை. ஸ்ரீ ராமருடைய ஜாதகமே அப்படி! கம்பர் பிறந்த வேளையும் அப்படித்தான்! இராஜ்யத்தைத் துறந்து வனவாசம் சென்ற இராமன் ஒரு பெரிய பயங்கரமான யுத்தத்தை நடத்த வேண்டியிருந்ததல்லவா? இராமாயணத்திலே மிகப் பெரிய காண்டம் யுத்த காண்டமேயல்லவா? கம்ப நாட்டாழ்வார் இராமாயணத்தை அரங்கேற்றுவதற்குத்தான் எவ்வளவு மல்லுக்கு நிற்கவேண்டியிருந்தது? அவருடைய குற்றமற்ற தலையிலே பெரிய பாறுங் கல்லைத் தூக்கிப்போட ஒட்டக்கூத்தர் பிரயத்தனம் செய்யவில்லையா?

மகா அநியாயம்

காமன் பண்டிகையில் எரிந்த கட்சியென்றும், எரியாத கட்சி என்றும் இருப்பதுபோல், கம்பன் விஷயத்தில் எரிக்கிற கட்சி, எரிக்காத கட்சி என்று ஏற்பட்டிருப்பதாய் ஸர் பி. டி. ராஜன் சொன்னார். எரிக்கிற கட்சிக்காரர்கள் மிகச் சிலராயிருப்பதினால் தான் அவர்கள் இம்மாதிரி தடலடி முறைகளைக் கையாள வேண்டியிருக்கிறது. இம்மாதிரி எதிர்ப்புக்களும் கலாட்டாக்களும் அரசியல் மேடைகளில் சர்வ சாதாரணம். அவற்றைச் சமாளிப்பது எப்படி என்பது அரசியல் தலைவர்க

இந்திய தொழிற் சாலையின் ஒவ்வொரு துறையிலும் அஜாக்ஸ்



வேலைப்பாடு முக்கியம் எனக் கருதப்படும் ஒவ்வொரு தொழிற் சாலையிலும் **அஜாக்ஸ்** உயர்தர பட்டசீலைகள் தேவையாக இருக்கின்றன. மரம், உலோகம், தோல் தொழிற்சாலைகளில் அஜாக்ஸ்பட்டசீலைகளை அதிகமாய் உபயோகப்படுத்துகிறார்கள்.

பிலின்ட் (ஸான்ட்)
கார்னெட்
எமரி
அஜாக்ஸைட்
பேப்பர்
க்ளாத்
டிஸ்க்ஸ்
ரோல்ஸ்
பெல்ட்ஸ்
டேப்ஸ்
மற்றுமுள்ள வைகள்.

அஜாக்ஸ்

பிராடக்ட்ஸ் லிமிடெட்,

106, அரமனைக்காரத் தெரு,
சென்னை.

மானேஜிங் ஏஜண்டுகள்:
முருகப்பா & ஸன்ஸ்.

தென் இந்தியாவுக்கு விற்பனை ஏஜண்டுகள்:

மார்ஷல் ஸன்ஸ் & கோ.,
(இந்தியா) லிமிடெட்.
தபால் பெட்டி 141 :: சென்னை.

A. S. K. 8.

கல்கி
பொருளடக்கம்

மலர் 3 | இதழ் 28 — 1944 ஏப்ரல் 23 — தாரண ௵ சித்திரை 11



தமிழையும் தமிழ் நாட்டையும் தமிழ் நாட்டுப் பெரியோர்களையும் பக்தியுடன் போற்றும் பழந் தமிழ்க் குடி மக்கள் பலர் இலங்கைத் தீவில் வாழ்கிறார்கள். அவர்களிலே ஒருவர் இளைஞர் சிவபாதசுந்தரம். இவர் தமிழ் நாடு போந்து, திருவாசகம் அருளிய மணிவாசகப் பெருமான் விஜயம் செய்த ஸ்தலங்களுக் கெல்லாம் முறையாகச் சென்றார். அந்தந்த ஸ்தல விசேஷங்களையும் தமது அநுபவங்களையும் கலந்து, "மாணிக்க வாசகர் அடிச்சுவட்டில்" என்னும் அழகிய பெயர் கொண்ட நூலை எழுதினார். ஸ்ரீ சிவபாதசுந்தரம் சென்றிருந்த ஸ்தலங்களில் மாணிக்கவாசகர் பிறந்த திருவாதவூரும் ஒன்றாகும். மதுரைக்கு அருகிலுள்ள திருவாதவூர் ஏரியில், ஏரிக்குக் காவல் தேவதையாக விளங்கி வரும் புருஷ மிருகம் என்னும் அபூர்வ சிற்பத்தை அவர் படம் பிடித்தார். மிருக உடலும், மனித முகமும் படைத்த அந்தப் புருஷ மிருகந்தான் இம்முறை நமது கல்கி இதழையும் காவல் புரிகின்றது.